அஃலா ஹழ்ரத்தின் رَحمَةُ اللهِ عَلَيْه அழகான பழக்கவழக்கங்கள்

06 August 2026



(For Islamic Brothers)

வாராந்த இஜ்திமா பயான்

(TAMIL)

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى خَاتَمِ النَّبِيّٖن
اَمَّا بَعْدُ! فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلصَّلٰوةُ وَالسَّلَامُ عَلَيْكَ يَا رَسُوْلَ اللّٰه وَعَلٰى آلِكَ وَاَصْحٰبِكَ يَا حَبِيْبَ اللّٰه
اَلصَّلٰوةُ وَالسَّلَامُ عَلَيْكَ يَا نَبِيَّ اللّٰه وَعَلٰى آلِكَ وَاَصْحٰبِكَ يَا نُوْرَ اللّٰه

نَوَيْتُ سُنَّتَ الْاِعْتِكَاف (மொழிபெயர்ப்பு: நான் ஸுன்னத்தான இஃதிகாஃபின் நிய்யத்தைச் செய்தேன்)

அன்பார்ந்த இஸ்லாமிய சகோதரர்களே! எப்பொழுதெல்லாம் மஸ்ஜிதுக்குள் நுழைகிறீர்களோ, நினைவு வரும்போது இஃதிகாஃபின் நிய்யத் செய்து கொள்ளுங்கள், ஏனெனில் எவ்வளவு நேரம் மஸ்ஜிதில் இருப்பீர்களோ அவ்வளவு நேரம் இஃதிகாஃபின் நன்மை கிடைத்துக் கொண்டே இருக்கும். நினைவில் வையுங்கள்! மஸ்ஜிதினுள் உண்பதற்கு, குடிப்பதற்கு, உறங்குவதற்கு அல்லது ஸஹ்ர், இஃப்தார் செய்வதற்கு, எதுவரையெனில், ஸம்ஸம் அல்லது ஓதி ஊதிய தண்ணீரைக் குடிப்பதற்குக்கூட ஷரீஅத்தில் அனுமதியில்லை. எனினும், இஃதிகாஃபின் நிய்யத் இருக்கும் பட்சத்தில் இவை அனைத்தும் அதன் ஒரு பகுதியாக அனுமதிக்கப்பட்டதாக ஆகிவிடும். இஃதிகாஃபின் நிய்யத்தும் வெறும் உண்பதற்காக, குடிப்பதற்காக அல்லது உறங்குவதற்காக மட்டும் இருக்கக் கூடாது, மாறாக அதன் நோக்கம் அல்லாஹ் தஆலாவின் திருப்பொருத்தத்திற்காக இருக்க வேண்டும். "ஃபதாவா ஷாமி"யில் உள்ளது: யாராவது மஸ்ஜிதினுள் உண்ணவோ, குடிக்கவோ, உறங்கவோ விரும்பினால், அவர் இஃதிகாஃபின்

நிய்யத்தை செய்துக் கொண்டு, சிறிது நேரம் திக்ருல்லாஹ் (அல்லாஹ்வை திக்ர்) செய்யட்டும், பிறகு அவர் விரும்புவதைச் செய்யட்டும். (அதாவது, இப்போது விரும்பினால் உண்ணலாம், குடிக்கலாம் அல்லது உறங்கலாம்)

ஸலவாத்தின் மகிமை

பாவிகளுக்கு ஷஃபாஅத் செய்யக்கூடிய பெருமானார் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அமுதவாக்கு:

مَنْ صَلّٰى عَلَيَّ مِاءَةً كَتَبَ اللهُ بَيْنَ عَيْنَيْهِ بَرَاءَ ةً مِّنَ النِّفَاقِ وَبَرَاءَةً مِّنَ النَّارِ وَاَسْكَنَهُ اللهُ يَوْمَ الْقِيَامَةِ مَعَ الشُّهَدَاءِ

யார் என் மீது நூறு (100) முறை ஸலவாத் ஓதுகிறாரோ, அல்லாஹ் அவனுடைய இரு கண்களுக்கு இடையே 'இவன் நயவஞ்சகத்திலிருந்தும் இன்னும் நரக நெருப்பிலிருந்தும் விடுதலை பெற்றவன்' என்று எழுதி விடுவான். மேலும், மறுமை நாளில் அவனை ஷுஹதாக்களுடன் வைத்திருப்பான்." (முஃஜம் அவ்ஸத், 5/252, ஹதீஸ்: 7235)

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

பயான் கேட்பதற்கான நிய்யத்துகள்

முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் பொன்மொழி:

اَفْضَلُ الْعَمَلِ اَلنِّيَّةُ الصَّادِقَةُ உண்மையான எண்ணம்தான் மிகச் சிறந்த அமல் ஆகும். (ஜாமிஉஸ் ஸஙீர், பக்கம்: 81, ஹதீஸ்: 1284)

நாயகத்தின் ஆஷிகீன்களே! ஒவ்வொரு செயலுக்கும் முன்பாக நல்ல நல்ல நிய்யத்துகள் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக்

கொள்ளுங்கள், ஏனெனில், நல்ல நிய்யத் ஒரு அடியானை சுவர்க்கத்தில் சேர்க்கிறது. பயானைக் கேட்பதற்கு முன்பும் நல்ல நல்ல நிய்யத்துகள் செய்து கொள்ளுங்கள்! உதாரணமாக நிய்யத் செய்யுங்கள்! ☞ மார்க்க கல்வியைப் பெறுவதற்காக முழு பயானையும் கேட்பேன். ☞ மரியாதையுடன் அமர்வேன். ☞ பயான் நிகழும்போது சோம்பேறித்தனத்திலிருந்து தவிர்ந்துக் கொள்வேன். ☞ எனது சீர்திருத்தத்திற்காக பயானைக் கேட்பேன். ☞ நான் கேட்பதை மற்றவர்களுக்கு எத்திவைக்க முயற்சிப்பேன். اِنْشَاءَالله

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்களின் சுருக்கமான அறிமுகம்

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! 25 ஸஃபருல் முழஃப்பர் நம்முடைய வழிகாட்டியும், சுன்னத் வல் ஜமாஅத்தினரின் தலைவருமான அஃலா ஹழ்ரத், இமாமே அஹ்லே சுன்னத், ஷாஹ் இமாம் அஹ்மத் ரZஸா கான் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்களின் உர்ஸ் (நினைவு) நாளாகும். அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيْه யார்?

۞ அவர் ஆஷிகீன்களின் இமாம் ஆவார் ۞ சுன்னத் வல் ஜமாஅத்தினரின் இமாம் ஆவார் ۞ மார்க்க அறிஞர்களின் இமாம் ۞ வணக்கசாலிகளின் இமாம் ۞ பற்றற்றவர்களின் இமாம் ۞ தக்வா (இறையச்சம்) உடையவர்களின் இமாம் ۞ சமகாலத்தில் வாழ்ந்த சட்டவல்லுநர்கள், ஹதீஸ் கலை அறிஞர்கள், குர்ஆன் விரிவுரையாளர்கள் ஆகியோரின் இமாம்

ஆவார் ۞ அவர் ஒரு முஜத்தித் (மார்க்கத்தை நிலை நிறுத்தியவர்) ஆவார் ۞ முஃபஸ்ஸிர் ஆவார் ۞ முஹத்திஸ் ஆவார் ۞ மாபெரும் பேரறிஞர் (Scholar) ஆவார் ۞ மிகச்சிறந்த புத்திசாலி (Intelligent) முஃப்தி ஆவார் ۞ குர்ஆனை மனனம் செய்த ஹாஃபிழ் ஆவார் ۞ இவை அனைத்திற்கும் மேலாக, இன்னுயிர் முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَ آلِهٖ وَ سَلَّم அன்னவர்களின் உண்மையான ஆஷிக் ஆவார்.

10 ஷவ்வால் 1272 ஹிஜ்ரி அதாவது 14 ஜூன் 1856 அன்று இந்தியாவின் பரேலி நகரில் அவர்களுடைய பிறப்பு நிகழ்ந்தது ۞ அவர்கள் ஒரு மார்க்க மற்றும் கல்விசார் குடும்பத்தின் விளக்காக இருந்தார்கள் ۞ அவர்களின் பெயர் முஹம்மத் ஆகும், அதேசமயம் அவர்களுடைய பாட்டனார் அவர்களை அஹ்மத் ரZஸா என்று அழைத்து வந்தார்கள், பின்னர் இதே பெயரிலேயே அவர்கள் பிரபலமானார்கள். ۞ 4 வயதிலேயே திருக்குர்ஆனை பார்த்து ஓதி முடித்து விட்டார்கள் ۞ வெறும் 13 வருடங்கள் 10 மாதங்கள் 4 நாட்கள் வயதிலேயே மார்க்கக் கல்வியை நிறைவு செய்து, முதல் ஃபத்வாவை எழுதினார்கள். ۞ கிட்டத்தட்ட 70க்கும் மேற்பட்ட துறைகளில் ஏறத்தாழ 1000 புத்தகங்களை எழுதியுள்ளார்கள். ۞ திருக்குர்ஆனின் மொழிபெயர்ப்பான 'கன்Zசுல் ஈமான்' ۞ 'ஃபதாவா ரZஸவிய்யா' ۞ 'ஹதாயிகே பக்ஷிஷ்' ஆகியவை அவர்களுடைய கல்வி மற்றும் இலக்கிய வரலாற்றுச் சாதனைகளாகும். ۞ அவர்கள் رَحمَةُ اللهِ عَلَيْه 2 முறை ஹஜ் செய்யும் பாக்கியத்தைப் பெற்றார்கள். ۞ இரண்டாவது முறை ரஸூலுல்லாஹி صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهٖ وَسَلَّم அன்னவர்களின் ரவ்ழா ஷரீஃபிற்கு முன்னிலையான போது, கண்மணி நாயகம்

صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَ آلِهٖ وَ سَلَّم அன்னவர்கள் விழித்திருக்கும் கண்களோடு அவர்களுக்கு தங்களின் திருக்காட்சியைக் காட்டி அருளினார்கள். ۞ இறையச்சமும், பேணுதலும் எந்தளவுக்கு இருந்தது என்றால், ஃபர்ளுகள் மற்றும் வாஜிபுகளைக் கடுமையாகப் பின்பற்றியதோடு மட்டுமல்லாமல், சுன்னத்துகள், நஃபில்கள் மற்றும் முஸ்தஹப்பாத்துகளையும் கூட அவர்கள் கைவிடவில்லை. ۞ குறைவாகவே புசிப்பார்கள், மேலும் குறைவாகவே உறங்குவார்கள். ۞ அவர்கள் رَحمَةُ اللهِ عَلَيْه 25 ஸஃபருல் முழஃப்பர் 1340 ஹிஜ்ரிக்கு அதாவது 28 அக்டோபர் 1921 வெள்ளிக்கிழமை அன்று இவ்வுலகை விட்டு பிரிந்தார்கள். ۞ அவர்களுடைய அடக்கஸ்தலம் பரேலி ஷரீஃபில் உள்ளது. 25 ஸஃபருல் முழஃப்பர் அன்று உலகம் முழுவதும் அவர்களுடைய உர்ஸ் கொண்டாடப்படுகிறது. (ஃபைZஸானே இமாமே அஹ்லே சுன்னத் (சிறப்பு மலர்), பக்கம்: 22 முதல் 24 வரை, சுருக்கமாக)

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّد

உண்மையாளர்களுடன் ஆகிவிடுமாறு குர்ஆனின் கட்டளை

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனில் நமக்கு உண்மையாளர்களுடன் இருக்குமாறு கட்டளையிட்டுள்ளான். பாகம்: 11, சூரா அத்தவ்பா, வசனம்: 119 இல் அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَ كُوْنُوْا مَعَ الصّٰدِقِيْنَ

கன்Zஸுல் இர்ஃபான் மொழிபெயர்ப்பு: ஈமான் கொண்டவர்களே!

அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள், மேலும் உண்மையாளர்களுடன் ஆகிவிடுங்கள்.

பிரபல திருக்குர்ஆன் விரிவுரையாளர், ஹகீமுல் உம்மத் முஃப்தி அஹ்மத் யார் கான் நயீமி رَحمَةُ اللهِ عَلَيه அவர்கள் இந்த திருவசனத்திற்கு வழங்கிய விளக்கவுரையின்படி, இந்த ஆயத்தில் 'ஸாதிகீன்' (அதாவது உண்மையாளர்கள்) என்பதில் 3 வகையான மக்கள் நாடப்படுகிறார்கள்: (1) சங்கையான ஸஹாபாக்கள் (2) ஆஷிகே ரஸூல் உலமாக்கள் மற்றும் (3) சங்கையான அவ்லியாக்கள். (தஃப்சீர் நயீமி, பாகம்: 11, சூரா அத்தவ்பா, வசனம்: 119 இன் கீழ், பாகம்: 11, பக்கம்: 115, சுருக்கப்பட்டது)

இப்போது இந்த ஆயத்தின் பொருள் இவ்வாறு அமையும்: ஈமான் கொண்டவர்களே! ஸஹாபாக்களுடன் இருங்கள், ஈமான் கொண்டவர்களே! உலமாக்களுடன் இருங்கள், ஈமான் கொண்டவர்களே! அவ்லியாக்களுடன் இருங்கள்.

மேலும், இந்த இடத்தில் மற்றொரு விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அது என்னவென்றால், 'உடன் இருப்பது' என்பதன் பொருள் என்ன? பொதுவாக ஒருவருடன் இருப்பதற்கு 2 அர்த்தங்கள் உள்ளன: (1) உடல் ரீதியாக உடன் இருப்பது (2) உள்ளத்தால் (மனதால்) உடன் இருப்பது. நிச்சயமாக, உடல் ரீதியாக சங்கையான ஸஹாபாக்கள் رَضِیَ اللهُ عنهم அவர்களின் நெருக்கம் கிடைப்பதும், ஆஷிகே ரஸூல் உலமாக்களின் தோழமை நசீபாகுவதும், சங்கையான அவ்லியாக்களின் தோழமை நசீபாகுவதும் சந்தேகத்திற்கு இடமின்றி மிகப்பெரிய பாக்கியத்திற்குரிய விஷயமாகும். ஆனால், இந்த திருவசனத்தில் உடல் ரீதியாக மட்டும் உடன்

இருப்பது நாடப்படவில்லை, மாறாக இதன் பொருள்: உள்ளத்தால் சங்கையான ஸஹாபாக்கள், உலமாக்கள் மற்றும் அவ்லியாக்களுடன் இருப்பது ஆகும். இதன் நோக்கம் என்னவென்றால்: ஈமான் கொண்டவர்களே! ஸஹாபாக்கள், உலமாக்கள், அவ்லியாக்களுடன் ۞ உள்ளத்தால் அன்பு வையுங்கள் ۞ அவர்களுடைய அகீதாக்கள் (கொள்கைகள்) எதுவோ, அந்த அகீதாக்களை நீங்களும் பின்பற்றுங்கள் ۞ அவர்களுடைய கோட்பாடுகள் எதுவோ, அந்த கோட்பாடுகளை நீங்களும் பின்பற்றுங்கள் ۞ அவர்களுடைய போதனைகளின்படி செயல்படுங்கள் ۞ அவர்களைப் போன்ற நற்பண்புகளை ஏற்படுத்துங்கள் ۞ அவர்களைப் போன்ற நன்னடத்தையை உருவாக்குங்கள்۞ அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஒளியைப் பெற்றுக் கொள்ளுங்கள் ۞ வெளிப்படையாகவும் ۞ மறைமுகமாகவும் அனைத்து நிலைகளிலும் அவர்களை நேசியுங்கள் ۞ இந்தப் பரிசுத்தமான பெருமக்கள் எந்தப் பாதையின் பயணியாக இருக்கின்றார்களோ, நீங்களும் அந்தப் பாதையின் பயணியாக மாறுங்கள் ۞ மேலும், அவர்கள் எந்த முறையில் வாழ்க்கை நடத்தினார்களோ, நீங்களும் அவர்களிடமிருந்து வழிகாட்டுதலைப் பெற்று அதே முறையில் வாழ்க்கை நடத்துங்கள்! (தஃப்சீர் நயீமி, பாரா: 11, சூரா அத்தவ்பா, ஆயத்: 119 இன் கீழ், பாகம்: 11, பக்கம்: 115)

الحمد لله! நமது தலைவர் அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيه அவர்களும் ஒரு வலீயே காமில் ஆவார்கள். அவர்களும் உண்மையானவர்கள், அவர்களுடைய அகீதாக்களும் உண்மையானவை, அவர்களுடைய கோட்பாடுகளும் உண்மையானவை, அவர்களுடைய போதனைகளும் உண்மையானவை, மேலும்

அவர்களுடைய ஒவ்வொரு செயலும் ரஸூலுல்லாஹி صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَ آلِهٖ وَسَلَّم அன்னவர்களின் சுன்னத்தின் பிரதிபலிப்பாகவும், உண்மையான பாதையின் அடையாளமாகவும் திகழ்கிறது.

வாருங்கள்! குர்ஆனின் கட்டளைப்படி செயல்படும் எண்ணத்துடன் ஒரு வலீயே காமிலின் (முழுமையான இறைநேசரின்) சில முபாரக்கான பழக்கவழக்கங்களைக் கேட்போம்! மேலும், நாமும் இந்த நற்பண்புகளைப் பின்பற்றி நம்முடைய வாழ்க்கையைச் சீரமைக்க முயற்சிப்போம் என்று நிய்யத் செய்துக் கொள்வோம்!

(1) ஸுன்னத்தைப் பின்பற்றுபவர்

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்களின் அழகான பழக்கவழக்கங்களின் ஒரு சிறப்பம்சம் (Quality) என்னவென்றால், அவர்கள் தனது வாழ்க்கையின் அடித்தளத்தை ரஸூலுல்லாஹி صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَ آلِهٖ وَ سَلَّم அன்னவர்களின் சுன்னத்தின் மீது அமைத்திருந்தார்கள். ஒவ்வொரு செயலிலும் சுன்னத்தைப் பின்பற்றுவதற்கு முழுமையாக முயற்சிப்பார்கள். மேலும் எந்தெந்த முறைகளில், எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எல்லாம் அவர்கள் சுன்னத்துகளின்படி செயல்பட்டார்கள்? கேளுங்கள்! ஸய்யித் அய்யூப் அலி சாஹிப் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு நாள் ஃபஜ்ர் தொழுகையின் நேரமாக இருந்தது, மக்கள் ஜமாஅத் தொழுகைக்காக காத்துக் கொண்டிருந்தனர். வழக்கத்திற்கு மாறாக அன்று அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்கள் வருவதற்கு சற்று தாமதமாகி விட்டது, அனைவரின் பார்வைகளும் அவர்களின் வீட்டை

நோக்கியே இருந்தன. இந்த நேரத்தில் அவர்கள் رَحمۃُ اللهِ عَلَيْه அவசர அவசரமாக வருகை தந்தார்கள். அப்போது மௌலானா கனாஅத் அலி என்னிடம் கூறினார்: 'இந்தக் குறுகிய நேரத்திலும் அஃலா ஹழ்ரத் رَحمۃُ اللهِ عَلَيْه அவர்கள் தங்களின் வலது காலை மஸ்ஜிதினுள் முதலில் வைக்கிறார்களா அல்லது இடது காலை வைக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும்...!! 'இப்போது எங்களுடைய பார்வைகள் அவர்களின் கால்களை நோக்கியே இருந்தன. சுப்ஹானல்லாஹ்! அர்ப்பணமாகி விடுங்கள்! அஃலா ஹழ்ரத் رَحمۃُ اللهِ عَلَيْه அவர்களின் சுன்னத்தின் மீதான அன்பு எவ்வளவு தனித்துவமானது ۞ மஸ்ஜிதின் படியில் முபாரக்கான கால் பதியும் போது வலது கால் ۞ மஸ்ஜிதின் தரையில் கால் பதியும் போதும் வலது கால் ۞ தரையின் ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்கு கால் பதியும் போதும் வலது கால் ۞ முன்னால் மஸ்ஜிதின் முற்றத்தில் ஒரு சஃப் (தொழுகை வரிசை) விரிக்கப்பட்டிருந்தது, அதன் மீது கால் பதியும் போதும் வலது கால், இத்துடன் மட்டும் முடிந்து விடவில்லை ۞ ஒவ்வொரு சஃப்பிலும் முதலில் வலது காலையே வைத்தார்கள் ۞ மிஹ்ராபுக்கு வருகை தரும் வரை ۞ முஸல்லா (தொழுகை விரிப்பு) மீது கால் வைத்த போதும் முதலில் வலது காலையே வைத்தார்கள். (ஃபைZஸானே அஃலா ஹழ்ரத், பக்கம்: 120)

سُبْحٰنَ الله! அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! மஸ்ஜிதினுள் நுழையும் போது முதலில் வலது காலை உள்ளே வைக்க வேண்டும் என்பது சுன்னத்தாகும். அஃலா ஹழ்ரத் رَحمۃُ اللهِ عَلَيْه அவர்களின் சுன்னத்தின் மீதான அன்பைப் பாருங்கள், எவ்வளவுதான் அவசரமாக இருந்தாலும், வெளிப்படையாகப்

பார்த்தால் கவனக்குறைவு ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் இருந்தாலும் ۞ அவர்களுடைய சிந்தனைகளில் ۞ அவர்களுடைய பழக்கவழக்கங்களில் ۞ அவர்களுடைய எண்ணங்களில் எந்நேரமும் சுன்னத்தின் சிந்தனைகளே ஆதிக்கம் செலுத்தி வந்தன. இத்தகைய அவசர நிலையிலும் கூட மஸ்ஜிதின் ஒவ்வொரு பகுதியிலும் வலது காலைக் கொண்டே ஆரம்பம் செய்கிறார்கள்.

ஆஹ்! மஸ்ஜிதின் இத்தகைய மரியாதை நமக்கும் கிடைக்கப் பெற வேண்டுமே. கைசேதமே! இன்றைய கால கட்டத்தில் நிலைமைகள் மிகவும் சீர்கெட்டுப் போய்விட்டன, மக்கள் மஸ்ஜிதின் கண்ணியத்தை மிகக் குறைவாகவே அறிந்து வைத்துள்ளனர் ۞ மஸ்ஜிதினுள் நுழைவதற்கான சுன்னத்துகள் என்ன? ۞ மஸ்ஜிதிலிருந்து வெளியேறுவதற்கான சுன்னத்துகள் என்ன? ۞ மஸ்ஜிதில் தங்கியிருப்பதற்கான சுன்னத்துகள் என்ன? என்பது மிகக்குறைந்த மக்களுக்கே தெரிந்திருக்கிறது, பின்பு சூழ்நிலைகளைப் பாருங்கள்! ۞ யாரோ ஒருவர் மஸ்ஜிதில் பேசிக் கொண்டிருக்கிறார் ۞ யாரோ ஒருவர் உரத்த குரலில் சத்தமிட்டுக் கொண்டிருக்கிறார் ۞ வீணான அரட்டைகளில் மூழ்கியிருக்கிறார்கள் ۞ மஸ்ஜிதினுள் இசை மெட்டுகள் (மியூசிகல் டியூன்ஸ்) ஒலித்துக் கொண்டிருக்கின்றன. மஸ்ஜிதானது ஷைத்தானிடமிருந்து தப்பிப்பதற்கான ஒரு வலுவான கோட்டையாகும், ஆனால் வருந்தத்தக்க விஷயம்! நாம் சுன்னத்தைப் பின்பற்றாத போது இங்கேயும் கூட நப்ஸ் மற்றும் ஷைத்தானின் பிடியில் சிக்கி விடுகிறோம், கைசேதம்! ۞ இப்போது மஸ்ஜித்களிலேயே சண்டை சச்சரவுகளும் நடைபெருகின்றன ۞ புறம் பேசுதல்களும் நடக்கின்றன ۞ கோள் மூட்டுதல்களும் நடக்கின்றன ۞ செய்யக்கூடியவர்கள்

கேலி கிண்டல்களையும் கூட செய்து விடுகிறார்கள். இந்த ஹதீஸ் ஷரீஃபை கேளுங்கள்! மேலும் இது எவ்வளவு கடுமையான பாவம் என்பதை இதிலிருந்து படிப்பினை பெறுங்கள்.

அவர்களுக்கு அல்லாஹ்விடம் எந்தத் தேவையும் இல்லை

இறுதி நபி, முஹம்மது அரபி صَلَّى اللهُ عَلَيْهِ وَ اٰلِهٖ وَ سَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: மனிதர்களுக்கு மத்தியில் ஒரு காலம் வரும், அப்போது மஸ்ஜிதுகளில் துன்யாவின் பேச்சுகள் பேசப்படும். நீங்கள் அவர்களுடன் அமர வேண்டாம், ஏனெனில் அவர்களுக்கு அல்லாஹ்விடம் எந்தவொரு தேவையும் இல்லை. (ஷுஅபுல் ஈமான், பாப் ஃபிஸ் ஸலவாத், பாகம்: 3, பக்கம்: 87, ஹதீஸ்: 2962)

ஹதீஸ் ஷரீஃபில் வந்துள்ளது:

اَلضِّحْكُ فِي الْمَسْجِدِ ظُلْمَةٌ فِي الْقَبْرِ

அதாவது மஸ்ஜிதில் சிரிப்பது மண்ணறையில் இருளை ஏற்படுத்துகிறது. (ஜாமிஉஸ் ஸஙீர், பக்கம்: 322, ஹதீஸ்: 5231)

அனுமதிக்கப்பட்ட (முபாஹான) பேச்சுகள் நன்மைகளைச் சாப்பிட்டு விடுகின்றன

ஹழ்ரத் அல்லாமா அலி காரி رَحمَةُ اللهِ عَلَيْه அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்): اَلْكَلَامُ الْمُبَاحُ فِي الْمَسْجِدِ مَكْرُوْهٌ يَأْكُلُ الْحَسَنَاتِ அதாவது மஸ்ஜிதில் முபாஹான (அதாவது அனுமதிக்கப்பட்ட) பேச்சுகளைப் பேசுவது மக்ரூஹ் ஆகும், மேலும் அது நன்மைகளைச் சாப்பிட்டு விடுகிறது. (மிர்காதுல் மஃபாதீஹ், கிதாபுஸ் ஸலாத், பாகம்: 2, பக்கம்: 418, ஹதீஸ்: 743 இன் கீழ்)

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! நாம் மஸ்ஜிதைக் கண்ணியப்படுத்த வேண்டும் ۞ மஸ்ஜித் அல்லாஹ் தஆலா வின் இல்லமாகும் ۞ அது வணக்க வழிப்பாட்டிற்குரிய இடமாகும் ۞ அல்லாஹ்வின் நினைவில் மூழ்குவதற்கும் ۞ துன்யாவை துண்டித்து விட்டு தன் ரப்பளவில் கவனத்தை திருப்புவதற்குரிய இடமாகும் ۞ இத்தகைய பரிசுத்தமான ۞ இத்தகைய தூய்மையான ۞ மற்றும் மிக உயர்ந்த அந்தஸ்துள்ள இடத்திற்கு வந்தும்கூட நாம் பாவங்களையே செய்வோம், மரியாதைக் குறைவாகவே நடந்து கொள்வோம் என்றால், நாம் எங்கே போய் சீர்திருந்துவது? எனவே, மஸ்ஜிதைக் கண்ணியப்படுத்தும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்! அல்லாஹ் தஆலா நமக்கும் மஸ்ஜிதின் ஒழுக்கம் மற்றும் கண்ணியம் செய்யும் பாக்கியத்தை தந்தருள்வானாக!

اٰمِیْن بِجَاہِ خَاتَمِ النَّبِیّٖن صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَآلِہٖ وَسَلَّم

(2) வலது கையைக் கொண்டே கொடுக்கல், வாங்கல் செய்து வந்தார்கள்

அஃலா ஹழ்ரத், இமாமே அஹ்லே சுன்னத் இமாம் அஹ்மத் ரZஸா கான் رَحمَۃُ اللّٰہِ عَلَیْہ அவர்களின் முபாரக்கான பழக்கம் என்னவென்றால், வலது கையைக் கொண்டே எதையும் கொடுப்பதும் வாங்குவதுமாக இருந்தார்கள். மலிகுல் உலமா, அஃலா ஹழ்ரத்தின் கலீஃபாவும், மாணவருமான முஃப்தி ஸய்யித் முஹம்மத் ழஃபருத்தீன் பிஹாரி رَحمَۃُ اللّٰہِ عَلَیْہ அவர்கள் தங்களின் 'ஹயாத்தே அஃலா ஹழ்ரத்' என்ற நூலில் எழுதுகிறார்கள்: ஒருவருக்கு ஏதேனும் ஒரு பொருளைக் கொடுக்க வேண்டியிருக்கும் போது, அவர் வாங்குவதற்காக

இடது கையை நீட்டினால் அஃலா ஹழ்ரத் رَحمۃُ اللهِ عَلَيْه அவர்கள் உடனடியாகத் தங்களின் கையை நிறுத்தி விடுவார்கள், மேலும் 'வலது கையில் வாங்குங்கள், இடது கையால் ஷைத்தான் வாங்குகிறான்' என்று கூறுவார்கள். (ஹயாத்தே அஃலா ஹழ்ரத், பாகம்: 1, பக்கம்: 189)

வலது கையைக் கொண்டு கொடுக்கல், வாங்கல் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்!

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! நாமும் எதைப் பெறுவதாக இருந்தாலும், கொடுப்பதாக இருந்தாலும் அல்லது கண்ணியத்திற்குரிய எந்தவொரு காரியமாக இருந்தாலும், அதை வலது கையைக் கொண்டே செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஹழ்ரத் அபூஹுரைரா رَضِیَ اللهُ عنه அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபிகளார் صَلَّى اللهُ عَلَيْهِ وَ آلِهٖ وَ سَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒவ்வொருவரும் வலது கையால் சாப்பிடட்டும், வலது கையால் குடிக்கட்டும், வலது கையால் வாங்கட்டும் மற்றும் வலது கையால் கொடுக்கட்டும். ஏனெனில் ஷைத்தான் இடது கையால் சாப்பிடுகிறான், இடது கையால் குடிக்கிறான், இடது கையால் கொடுக்கிறான் மற்றும் இடது கையால் வாங்குகிறான். (இப்னு மாஜா, கிதாபுல் அத்இமா, பாபுல் அக்லி பில் யமீன், பக்கம்: 532, ஹதீஸ்: 3266)

முஸ்லிம்களின் அன்னை ஹழ்ரத் ஆயிஷா ஸித்தீகா رَضِیَ اللهُ عنها அவர்கள் கூறுகிறார்கள்: பெருமானார் صَلَّى اللهُ عَلَيْهِ وَ آلِهٖ وَ سَلَّم அன்னவர்கள் வலது பக்கத்திலிருந்து வுழு செய்வதை விரும்பினார்கள், இதே போன்று தலை வாரும் போதும் வலது பக்கத்திலிருந்தே வாரினார்கள், எந்தளவுக்கு என்றால் புனித

பாதணிகளை அணிய நாடினாலும் கூட முதலில் வலது காலை புனித பாதணியினுள் நுழைப்பார்கள். (ஷமாயிலே முஹம்மதிய்யா, Bபாபு மாஜாஅ ஃபீ நஃலி ரஸூலில்லாஹி صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهٖ وَسَلَّم, பக்கம்: 189, ஹதீஸ்: 85)

இந்த 3 காரியங்கள் மட்டுமல்ல, மாறாக கண்ணியம் மற்றும் மகத்துவத்திற்குரிய எத்தனை காரியங்கள் இருக்கிறதோ, அவை அனைத்தையும் பெருமானார் صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهٖ وَسَلَّم அன்னவர்கள் வலது பக்கத்திலிருந்தே தொடங்க விரும்பினார்கள். எனவே ۞ ஆடை அணிவது ۞ பள்ளிவாசலுக்குள் நுழைவது ۞ தலைமுடி மற்றும் மீசை போன்றவற்றை வெட்டுவது ۞ மிஸ்வாக் செய்வது ۞ நகம் வெட்டுவது ۞ கண்களில் சுர்மா இடுவது ۞ ஒருவருக்கு ஏதேனும் ஒரு பொருளைக் கொடுப்பது அல்லது ஒருவரிடமிருந்து வாங்குவது ۞ சாப்பிடுவது மற்றும் குடிப்பது போன்ற இதர காரியங்களை வலது கையால் வலது பக்கத்திலிருந்தே செய்ய வேண்டும். அல்லாஹ்தஆலா நமக்கு இதன்படி செயல்படும் பாக்கியத்தை நசீபாக்குவானாக!

اٰمِيْن بِجَاهِ خَاتَمِ النَّبِيّٖن صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهٖ وَسَلَّم

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

(3) உலகப் பேச்சுகள் பேசுவதையும் விரும்ப மாட்டார்கள்

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்களின் அழகான முபாரக்கான பழக்கவழக்கங்களில் ஒன்று என்னவென்றால், அவர்கள் எப்போதும் மார்க்க காரியங்களிலும், மறுமையின் நன்மை பயக்கும் விஷயங்களிலுமே

ஈடுபட்டிருப்பார்கள். உலகத்தின் பால் மனதைச் செலுத்துவது, அதன் பக்கம் கவனம் திருப்புவது என்பதெல்லாம் மிக தூரமான விஷயம், அஃலா ஹழ்ரத் رَحمۃُ اللهِ عَلَيْه அவர்கள் உலக விஷயங்களைப் பேசுவதைக் கூட விரும்ப மாட்டார்கள். ஸத்ருஷ் ஷரீஆ முஃப்தி முஹம்மத் அம்ஜத் அலி அஃழமி رَحمۃُ اللهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு வருகை தந்தவர்களின் ஒரு பெரிய கூட்டமே அங்கு இருக்கும், ۞ பொதுவாக மக்கள் மார்க்க விஷயங்களைக் கேட்பார்கள், அதற்கு அஃலா ஹழ்ரத் رَحمۃُاللهِعَلَيْه அவர்கள் பதிலளிப்பார்கள் ۞ அல்லது ஏதேனும் ஒரு ஹதீஸ் ۞ அல்லது ஆயத் சம்பந்தமாக எடுத்துரைப்பார்கள் ۞ சில நேரங்களில் சங்கையான அவ்லியாக்களின் வரலாற்று நிகழ்வுகளை விவரிப்பார்கள். அங்கு வந்திருந்தவர்களில் எந்தவொரு நபரும் 'நான் அஃலா ஹழ்ரத்தை உலக விஷயங்களைப் பற்றிப் பேசக் கண்டேன்' என்று கூற முடியாது, எப்போதும் ஏதேனும் ஒரு மார்க்க ரீதியான விஷயமே பேசப்பட்டு வரும். (ஃபைZஸானே அஃலா ஹழ்ரத், பக்கம்: 174)

سُبْحٰنَ اللهِ! என்னவொரு அழகான செயல். இந்த உலகம், அதைப் பற்றி பேசுவதற்கு எப்போது தகுதியானதாக இருந்தது? அல்லாஹ்வை நேசிப்பவர்கள் மறுமையை விரும்புபவர்களாக இருக்கிறார்கள், எனவே அவர்கள் மார்க்கம் மற்றும் மறுமை சார்ந்த பேச்சுக்களையே பேசுகிறார்கள். பரிதாபம் என்னவெனில்! இன்றைய கால கட்டத்தில் பேச்சுக்களின் தலைப்பு (Topic) வெறும் உலகம், உலகம் மேலும் உலகம் என்று மட்டுமே ஆகிவிட்டது. நாம் யாருடைய அருகிலாவது அமர்ந்தால் ۞ யாரோ ஒருவர் அரசாங்கங்களைப் பற்றிய பேச்சுகளை எடுத்துக்

கொண்டு அமர்கிறார் ۞ கிழக்கில் அமர்ந்துக்கொண்டு யாரோ ஒருவர் மேற்கத்திய கதைகளைத் தொடங்குகிறார் ۞ யாரோ ஒருவர் தற்போதைய சூழ்நிலைகளை நினைத்து அழுகிறார் ۞ யாரோ ஒருவர் தங்களின் உலக ரீதியான வெற்றிகள் மற்றும் சாதனைகளின் கதைகளை எடுத்துக் கொண்டு அமர்கிறார். ஆஹ்! நமக்கும் மறுமையைப் பற்றிய கவலை கிடைத்துவிட வேண்டுமே!

ஒரு பொருளைப் பற்றித்தான் நினைவு கூறப்படும்

ஒருமுறை ஒரு நபர் ஹழ்ரத் ராபியா பஸரிய்யா رَحمَةُ اللهِ عليها அவர்களுக்கு முன்னிலையில் உலகத்தைப் பற்றிப் பேசினார், அப்போது அவர்கள் கூறினார்கள்: மதிப்புமிக்க பொருளைப் பற்றித் தான் நினைவு கூறப்படும், எதற்கு எந்தவொரு மதிப்பும் (Value) இல்லையோ அதைப்பற்றி பேசப்படுவதில்லை. (தாரீகுல் இஸ்லாம் லித் தஹபி, பாகம்: 4, பக்கம்: 548)

விளங்கிக் கொள்ள முடிகிறது, உலக விஷயங்களைப் பேசுவதை விட்டும் தவிர்ந்து கொள்வதே மிகச் சிறந்தது. அதற்குப் பதிலாக அல்லாஹ்வின் திக்ரை செய்துக் கொள்ளுங்கள்! سُبْحٰنَ اللهِ، اَلْحَمْدُ لِلّٰهِ போன்ற தஸ்பீஹுகளை ஓதிக் கொள்ளுங்கள், இதன் மூலம் நன்மைகள் கிடைக்கும்.

(4) அஃலா ஹழ்ரத் அவர்கள் துஆக்கள் செய்து வந்தார்கள்

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! இப்போது அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்களின் ஒரு தனித்துவமான முபாரக்கான பழக்கத்தைக் கேளுங்கள்! அஃலா ஹழ்ரத் இமாமே அஹ்லே சுன்னத் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்கள் ஒவ்வொரு முஸ்லிமிடமும் மிக

அதிக அன்பு காட்டக்கூடியவராக இருந்தார்கள், அவர்கள் தங்களைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி அல்லது அந்நியராக இருந்தாலும் சரி, அனைவர் மீதும் இரக்கமும் நன்நாட்டமும் கொள்ளும் மகத்தான உணர்வைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் رَحمَۃُ اللهِ عَلَيْه தன்னை பின்தொடர்பவர்கள் மீது எந்தளவு கவனம் செலுத்தினார்கள் என்றால், தங்களின் ۞ உறவினர்கள் ۞ நெருங்கியவர்கள் ۞ நண்பர்கள் மற்றும் ۞ பிரத்தியேகமான முரீதுகளின் பெயர்களைக் கொண்ட ஒரு நீண்ட பட்டியலைத் தயாரித்து வைத்திருந்தார்கள். ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு தங்களின் அவ்ராத்கள் மற்றும் வழீஃபாக்களின் இறுதியில், இவர்கள் அனைவருக்காகவும் பெயர் பெயராகக் குறிப்பிட்டு துஆ செய்வார்கள். தங்களுடைய பெயரும் இந்தப் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்று மக்கள் ஆசைப்பட்டார்கள். ஸய்யித் அய்யூப் அலி ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: ஒருநாள் நான் மிகுந்த கவலையில் இருந்தேன், அஃலா ஹழ்ரத் رَحمَۃُ اللهِ عَلَيْه அவர்களின் சமூகத்தில் துஆ செய்யுமாறு வேண்டினேன். அவர்கள் துஆ செய்ததோடு, எனக்கும் எனது சகோதரர் ஸய்யித் கனாஅத் அலி அவர்களுக்கும் கூறினார்கள்: உங்களிருடைய பெயரையும் நான் துஆவுடைய பட்டியலில் சேர்த்துக் கொண்டேன், அது படிப்படியாக மிக நீளமாக ஆகிவிட்டது. இந்த எல்லாப் பெயர்களும் எனக்கு நினைவில் இருக்கின்றன, தினந்தோறும் பெயர் பெயராகக் குறிப்பிட்டு அனைவருக்காகவும் துஆ செய்கிறேன். (ஃபைZஸானே அஃலா ஹழ்ரத், பக்கம்: 180)

سُبْحٰنَ اللهِ! எவ்வளவு அழகான ஒரு குணம்...! நாம் சற்று நம்மைப் பற்றி சிந்தித்துப் பார்ப்போம், மிக தூரம் செல்ல வேண்டிய

அவசியமில்லை. ஏதேனும் ஒரு நாளில் உங்களுடைய மொபைலை மட்டும் ஆய்வு செய்து பாருங்கள்! மொபைலில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தொடர்பு பட்டியலை (Contact List) திறந்து பாருங்கள்! இதில் எத்தனை நபர்களின் எண்கள் சேமிக்கப்பட்டுள்ளன, நிச்சயமாக யாருடைய எண் சேமிக்கப்பட்டுள்ளதோ, எங்காவது ஒரு இடத்தில் உங்களுக்கும் அவருக்கும் இடையில் ஏதேனும் ஒரு தொடர்பு கட்டாயம் இருந்திருக்கும். இப்போது சற்று சிந்தித்துப் பாருங்கள்! நாம் தொழும் போது, நம் ரப்பிற்கு முன்னிலையில் துஆவிற்காகக் கைகளை ஏந்தும் போது, நமக்காக நாம் எவ்வளவோ விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம், உதாரணமாக ۞ எஜமானே! எனக்கு இவ்வுலக நல்ல விடயங்களையும் வழங்கியருள்வாயாக ۞ எஜமானே! எனக்கு மறுமையின் நல்ல விடயங்களையும் வழங்கியருள்வாயாக ۞ எஜமானே! என் இல்லத்திற்கும் வீட்டாருக்கும் நல்லதை செய்தருள்வாயாக ۞ கருணையாளனே! என் பிள்ளைகளை பாதுகாப்பாயாக ۞ என் குடும்பத்தாரை பாதுகாப்பாயாக.

சற்று சிந்தித்துப் பாருங்கள்! நம்முடைய மொபைலில் இத்தனை எண்கள் சேமிக்கப்பட்டுள்ளதே, இவர்களில் ۞ நம்முடைய சகோதரர்களின் எண்கள் இருக்கின்றன ۞ நெருங்கிய உறவினர்களின் (Relatives) எண்கள் இருக்கின்றன ۞ நண்பர்களின் எண்கள் இருக்கின்றன, நாம் எப்போதாவது இந்த மக்களுக்காகவும் துஆ செய்திருக்கிறோமா? எப்போதாவது துஆ செய்யும் நேரத்தில் இந்த மக்களின் நினைவு நமக்கு வந்திருக்கிறதா? நான் மிக தூரமானவர்களைப் பேசவில்லை, இவர்கள் எங்காவது ஒரு இடத்தில் நம்மோடு தொடர்பு உடையவர்களாக அல்லது தொடர்பு இருந்தவர்களாக

இருக்கக்கூடிய மக்கள். நாம் இவர்களுக்காகக் கூட துஆ செய்வதில்லை, அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்களின் நன்னடத்தையினைப் பாருங்கள்! அவர்கள் தங்களின் உறவினர்கள், நண்பர்கள், எந்தளவு என்றால் தங்களின் முரீதீன்களின் பெயர்களைக் கூட ஒரு பட்டியலாகத் தயாரித்து வைத்திருந்தார்கள். மேலும் அர்ப்பணமாகி விடுங்கள்! கூறுகிறார்கள்: இந்த அனைத்துப் பெயர்களும் எனக்கு மனப்பாடமாக நினைவிருக்கின்றன, தினந்தோறும் பெயர் கூறி இவர்களுக்காக நான் துஆக்கள் செய்கிறேன்.

முஸ்லிம்களுக்காக துஆ செய்து வாருங்கள்!

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! நாமும் நம்முடைய இஸ்லாமிய சகோதரர்களுக்காக துஆக்கள் செய்ய வேண்டும், அதன் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இறுதித் தூதர் முஹம்மத் முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَ آلِهٖ وَ سَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: யார் முஸ்லிமான ஆண்களுக்காகவும் இன்னும் பெண்களுக்காகவும் பாவமன்னிப்புத் தேடி துஆ செய்கிறாரோ, அல்லாஹ் தஆலா அவருக்கு ஒவ்வொரு முஸ்லிமான ஆண் மற்றும் பெண்ணிற்குப் பகரமாக ஒரு நன்மையை வழங்குகிறான். (ஜாமிஉஸ் ஸஃகீர், பக்கம்: 513, ஹதீஸ்: 8419)

سُبْحٰنَ اللهِ! கணக்கிட்டுப் பாருங்கள்! ஹழ்ரத் ஆதம் عَلَيْهِ السَّلَام அவர்கள் முதற்கொண்டு இதுவரையிலும் கோடானகோடி முஸ்லிம்கள் இவ்வுலகிற்கு வருகை தந்துள்ளனர், நாம் செய்ய வேண்டியது இந்த துஆ தான்:

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ وَلِكُلِّ مُؤْمِنٍ وَّ مُؤْمِنَةٍ

(யா அல்லாஹ்! என்னையும் இன்னும் அனைத்து முஸ்லிமான ஆண்களையும் பெண்களையும் மன்னித்தருள்வாயாக) இதன் பரகத்தினால் اِنْ شَآءَ اللّٰه الْكَرِيْم! கோடானகோடி நன்மைகள் கைசேரும். அல்லாஹ் தஆலா இந்த பாக்கியத்தை வழங்கியருள்வானாக.

اٰمِيْن بِجَاهِ خَاتَمِ النَّبِيّٖن صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّد

ஜனாஸாவில் அதிகளவில் துஆக்கள் கேட்பார்கள்

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! அஃலா ஹழ்ரத் இமாமே அஹ்லே சுன்னத் رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்கள் இரக்கமுள்ள நல்மனதைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் ஜனாஸாக்களில் கலந்து கொள்வார்கள், மேலும் ஜனாஸாவின் போதும், ஜனாஸாவுக்குப் பிறகும் மரணித்தவருக்காக அதிகளவில் துஆ செய்வதன் மூலம் மய்யித் மீதான தங்களின் அனுதாபத்தை வெளிப்படுத்துவார்கள். அஃலா ஹழ்ரத் رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்கள் எந்தவொரு பாக்கியசாலியின் ஜனாஸா தொழுகையை நடத்தினாலும், அவர்கள் தங்களின் பலமிக்க பரிந்துரையைக் கொண்டு அவரின் பாவமன்னிப்பைப் பெற்றுத் தருகிறார்களோ என்று அங்கு வந்திருப்பவர்களுக்கு தோன்றும். மேலும் அவர்கள் மிக நீண்ட நேரம் ஜனாஸா தொழுகையை நடத்துவார்கள். இந்தத் தாமதத்திற்கான வெளிப்படையான காரணம், ஹதீஸ்களில் வந்துள்ள துஆக்கள் அனைத்தையும் அவர்கள் ஓதுபவர்களாக இருந்தார்கள். (ஃபைZஸானே அஃலா ஹழ்ரத், பக்கம்: 181)

ஆஹ்! அவர்கள் எனது ஜனாஸா தொழுகையை நடத்த வேண்டுமே!

ஒரு ஸய்யித் சாஹிப் இருந்தார், அவர் கூறுவார்: ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது வாழ்க்கை மிகவும் பிரியமானதாகும், மேலும் எனக்கும் எனது வாழ்க்கை மிகவும் பிரியமானதுதான், ஏனெனில் அஃலா ஹழ்ரத் அவர்கள் எனது ஜனாஸா தொழுகையை நடத்தி எனக்கு மன்னிப்பை பெற்றுத் தருவார்கள் என்ற ஒரே காரணத்திற்காக. எனது மரணம் அஃலா ஹழ்ரத் அவர்களின் வாழ்நாளிலேயே நிகழ வேண்டும் என்றும், அவர்கள் எனது ஜனாஸா தொழுகையை நடத்த வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன், அது எனது பாவமன்னிப்பிற்கும் விமோசனத்திற்கும் காரணமாக அமையும். (ஃபைஜானே அஃலா ஹழ்ரத், பக்கம்: 181)

பாவமன்னிப்பு கிடைப்பதற்குக் காரணம் என்னவாக அமைந்தது?

பரேலி ஷரீஃபில் நவாப் அஸீஸ் அஹ்மத் என்ற பெயருடைய ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரின் வாழ்க்கை வெளிப்படையாக நல்ல அமல்களைச் செய்வதில் கழியவில்லை, அவர் மரணித்த போது அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்கள் அவரின் ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள். பின்னர் அந்த நவாப் அஸீஸ் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மனைவி அவரை கனவில் கண்டார், நவாப் ஸாஹிப் அவர்கள் மிகச் சிறந்த நிலையில் இருப்பதைக் கண்ட அந்த அம்மையார் கேட்டார்: உங்களுடைய மன்னிப்பிற்குக் காரணம் என்னவாக அமைந்தது? நவாப் ஸாஹிப் கூறினார்: அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيْه அவர்கள் எனது ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள் மேலும் எந்தளவு

துஆக்கள் செய்தார்கள் என்றால் என்னுடைய எல்லாப் பாவங்களையும் மன்னிக்க வைத்து விட்டார்கள்.! (ஃபைZஸானே அஃலா ஹழ்ரத், பக்கம்: 181)

سُبْحٰنَ اللّٰه! எனது அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللّٰهِ عَلَيْه அவர்களின் கண்ணியம் எவ்வளவு மகத்தானது...!!

நாம் ஜனாஸா தொழுகையை கற்றுக்கொண்டு விட்டோமா?

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு விஷயம் இது! ஜனாஸா தொழுகைக்காக ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து துஆக்களும் அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللّٰهِ عَلَيْه அவர்களுக்கு மனப்பாடமாகத் தெரிந்திருந்தன. அவர்கள் ஜனாஸா தொழுகை நடத்தும்போது, அந்த மரணித்தவருக்கு நன்மையை நாடி, அந்த அனைத்து துஆக்களையும் ஓதிவிடுவார்கள்.

இப்போது சிந்தித்துப் பாருங்கள்: ۞ ஜனாஸா தொழுகையின் ஒரே ஒரு துஆவாவது நமக்கு மனப்பாடமாகத் தெரியுமா? ۞ ஜனாஸா தொழுகையில் ஃபர்ளுகள் எத்தனை? ۞ அதன் ருக்ன் என்ன? ۞ ஜனாஸா தொழுகைக்கு நிய்யத் எவ்வாறு வைக்க வேண்டும்? ۞ ஜனாஸா தொழுகைக்கான ஸனா எது? ۞ பருவமடைந்த ஆண் மற்றும் பெண்ணின் ஜனாஸா தொழுகைக்கான துஆ எது? ۞ பருவமடையாத சிறுவன் மற்றும் சிறுமியின் ஜனாஸா தொழுகைக்கான துஆ எது? இவை அனைத்தும் நமக்குத் தெரியுமா? கவலை என்னவென்றால்! நாம் மார்க்கத்தை விட்டு எவ்வளவு தூரம்

விலகிச் சென்று விட்டோம் என்றால், இன்று பல முஸ்லிம்களுக்கு ஜனாஸா தொழுகையின் முறை தெரிவதில்லை. பொதுவாக ஜனாஸா தொழுகை நடக்கும்போது இமாம் அவர்கள் அதன் முறையைக் கற்றுக்கொடுக்கிறார்கள், ஆனால் அடுத்த முறை வரும்போது அது மீண்டும் மறந்து விடுகிறது.

உங்களுக்குத் தெரியுமா? ஜனாஸா தொழுகை என்பது ஃபர்ளு கிஃபாயா ஆகும். எங்காவது மரணம் நிகழ்ந்து, யாராவது ஒருவர் ஜனாஸா தொழுகை தொழுது விட்டாலும், அனைவரின் மீதிருந்த கடமையும் நீங்கி விடும். ஒருவேளை அவருக்கு ஜனாஸா தொழுகை தொழ வைக்கப்படவில்லை என்றால், இந்தத் தகவல் யார் யாருக்கெல்லாம் சென்றடைந்ததோ, அவர்கள் அனைவரும் பாவிகளாகி விடுவார்கள். (பஹாரே ஷரீஅத், பாகம்: 1, பக்கம்: 825, பகுதி: 4)

மரணித்தவருக்கு மண்ணறையில் வழங்கப்படும் முதல் பரிசு

அன்புத் தலைவர், மக்கி மதனி முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَ آلِهٖ وَ سَلَّم அன்னவர்களிடம் ஒருவர் கேட்டார்: "ஒரு முஃமின் கப்ரில் நுழையும் போது, அவருக்கு வழங்கப்படும் முதல் பரிசு என்ன?" அதற்கு அண்ணலார் கூறினார்கள்: "அவரது ஜனாஸா தொழுகையை தொழுதவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன." (ஷுஅபுல் ஈமான், பாகம்: 7, பக்கம்: 7, ஹதீஸ்: 9257)

அல்லாஹ்வின் இறுதித் தூதர், அண்ணல் நபி صَلَّى اللهُ عَلَيْهِ وَ آلِهٖ وَ سَلَّم அன்னவர்கள் கூறினார்கள்: "ஒரு சுவனவாசி மரணித்து விடும்போது, அவரது ஜனாஸாவை சுமந்து சென்றவர்களையும், அவருக்கு பின்னால் நடந்து சென்றவர்களையும் மேலும் அவரது ஜனாஸா தொழுகையை நிறைவேற்றியவர்களையும் வேதனை

செய்வதற்கு அல்லாஹ் வெட்கப்படுகிறான்." (முஸ்னத் ஃபிர்தவ்ஸ், பாகம்: 1, பக்கம்: 282, ஹதீஸ்: 1108)

மற்றொரு ஹதீஸ் ஷரீஃபில் வந்துள்ளது: "யாரொருவர் தனது வீட்டிலிருந்து ஜனாஸாவுடன் புறப்பட்டு, ஜனாஸா தொழுகை தொழுது, மேலும் ஜனாஸா அடக்கம் செய்யப்படும் வரை ஜனாஸாவுடனே இருக்கிறாரோ, அவருக்கு 2 கீராத் நன்மைகள் உண்டு. அதில் ஒவ்வொரு கீராத்தும் உஹத் மலையின் அளவிற்கு நிகரானதாகும். இன்னும் யார் ஜனாஸா தொழுகையை மட்டும் தொழுதுவிட்டு திரும்பி விடுகிறாரோ, அவருக்கு ஒரு கீராத் நன்மை உண்டு." (முஸ்லிம், கிதாபுல் ஜனாஇஸ், பக்கம்: 340, ஹதீஸ்: 945)

பாருங்கள்! இவை எவ்வளவு அழகான சிறப்புகள், ஜனாஸா தொழுகை தொழுவதற்கு எத்தனை நன்மைகள் உள்ளன...!! நாம் யாருடைய ஜனாஸா தொழுகையையாவது தொழுதால், யார் அறிவார் அவர் ஒரு சுவனவாசியாக இருக்கலாம், மேலும் அவரது பொருட்டால் நமக்கும் பாவமன்னிப்பு வழங்கப்பட்டு விடலாம்...!! ஆனால் கவலை என்னவென்றால்! நமக்கு ஜனாஸா தொழுகை தொழவே தெரிவதில்லை, நமக்கு ஜனாஸா தொழுகையின் துஆக்களே மனப்பாடமாக இல்லை.

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! நாம் இந்த விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும். الحمد لله! நாம் முஸ்லிம்கள், ஒரு முஸ்லிமுக்கு இவை அனைத்தும் மிக அடிப்படையான (Basic) விடயங்களாகும். ۞ வுழு செய்யும்முறை நமக்குத் தெரிந்திருக்க வேண்டும் ۞ வுழுவின் ஃபர்ளுகள் தெரிந்திருக்க வேண்டும் ۞ ஒழுவின் சுன்னத்துகள் தெரிந்திருக்க வேண்டும் ۞ தொழுகையின் முறை தெரிந்திருக்க வேண்டும் ۞ தொழுகையின் ஃபர்ளுகளும், வாஜிபாத்துகளும் நமக்குத்

தெரிந்திருக்க வேண்டும் ۞ சரியான தஜ்வீத் மற்றும் கிராஅத்துடன் திருக்குர்ஆனை ஓதுவதற்கு நாம் கற்றுக் கொண்டிருக்க வேண்டும் ۞ ஜனாஸா தொழுகை அறிந்திருக்க வேண்டும் ۞ தூங்குவது, விழிப்பது ۞ உண்பது, குடிப்பது ۞ வீட்டிற்குள் நுழைவது ۞ வீட்டிலிருந்து வெளியேறுவது இதுபோன்ற சில சுன்னத்துகளும் நமக்கு மனப்பாடமாக இருக்க வேண்டும்.

இவை அனைத்தையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு எளிய வழியைக் கூறட்டுமா? الحمد لله! நாயகத்தின் ஆஷிகீன்களுடைய மார்க்க அமைப்பான தஃவதே இஸ்லாமி, ஒவ்வொரு கணமும் நமக்கு மார்க்கத்தைக் கற்றுக்கொடுப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றது. நாயகத்தின் ஆஷிகீன்கள் ۞ மஸ்ஜிதுகள் ۞ கடைகள் ۞ தொழிற்சாலைகள் ۞ பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் போன்றவற்றிலும், 'மத்ரஸதுல் மதீனா பாலிஙான் நடத்துகிறார்கள். ۞ மத்ரஸதுல் மதீனா பாலிஙானில் பெரிய வயதுடைய இஸ்லாமிய சகோதரர்களுக்கு திருக்குர்ஆன் சரியான தஜ்வீத் மற்றும் கிராஅத்துடன் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ۞ வுழு, குளிப்பு, தொழுகை மற்றும் ஜனாஸா தொழுகையின் ஏனைய சட்டத்திட்டங்களும் வழிகாட்டுதல்களும் கற்றுக்கொடுக்கப் படுகின்றன. ۞ சுன்னத்துகளும் கற்றுத்தரப்படுகின்றன, மேலும் ۞ மொழிபெயர்ப்பு மற்றும் விளக்கவுரையை படிப்பதற்கும் கேட்பதற்குமான வாய்ப்பும் கிடைக்கிறது. ۞ புனித ஹதீஸில் வந்துள்ளது: "உங்களில் சிறந்தவர் குர்ஆனைக் கற்று, அதை மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்பவரே ஆவார்." (புகாரி, கிதாபு ஃபழாஇலில் குர்ஆன், பக்கம்: 1299, ஹதீஸ்: 5027)

۞ மற்றொரு அறிவிப்பில் வந்துள்ளது: "யாரொருவர் திருக்குர்ஆனைக் கற்று, கற்றுக்கொடுத்து, மேலும் திருக்குர்ஆனில் உள்ளவற்றின் மீது அமல் செய்கிறாரோ, திருக்குர்ஆன் அவருக்காக பரிந்துரை செய்யும் இன்னும் அவரை சுவனத்திற்கு அழைத்துச் செல்லும்." (கன்Zசுல் உம்மால், கிதாபுல் அத்கார், பாகம்: 1, பக்கம்: 266, ஹதீஸ்: 2373)

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! இன்றே உங்கள் அருகில் நடைபெறும் 'மத்ரஸதுல் மதீனா பாலிஙானில் நுழைவை (அட்மிஷன்) பெற்றுக்கொள்ளுங்கள்! اِنْ شَآءَ اللّٰه الْكَرِيْم! இறைநேசர்களின் அருட்கொடை நஸீபாகும், சுன்னத்துகளைக் கற்றுக் கொள்வீர்கள், மேலும் உலகம் முழுவதும் சுன்னத்துகளின் செய்தியைப் பரப்புபவர்களாக மாறிவிடுவீர்கள். அல்லாஹ் தஆலா நமக்கு அமல் செய்யும் பாக்கியத்தை வழங்குவானாக.

அஃலா ஹழ்ரத் رَحمةُ اللهِ عَلَيْه அவர்களின் இன்னும் சில நல்ல பழக்கவழக்கங்கள்

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! நாம் அஃலா ஹழ்ரத் رَحمةُ اللهِ عَلَيْه அவர்களின் சில நல்ல மற்றும் அழகான பழக்கவழக்கங்களைப் பற்றிய நல்வார்த்தைகளைக் கேட்டோம், வாருங்கள்! சுருக்கமாக இன்னும் சில நல்ல பழக்கங்களைப் பற்றிக் கேட்போம்.

۞ அஃலா ஹழ்ரத் رَحمةُ اللهِ عَلَيْه அவர்கள் உரக்கச் சிரிக்கும் பழக்கம் இல்லாதவர்களாக இருந்தார்கள். ۞ கொட்டாவி வந்தால், விரலை பற்களுக்கிடையே அழுத்திக் கொள்வார்கள் மேலும் எந்தச் சத்தமும் எழுப்ப மாட்டார்கள். ۞ வாய்

கொப்பளிக்கும் போது, இடது கையை தாடி முடிகளின் மீது வைத்து, தலையைக் குனிந்து வாயிலிருந்து தண்ணீரைக் கீழே விடுவார்கள். ۞ கிப்லாவை நோக்கி ஒருபோதும் எச்சில் துப்ப மாட்டார்கள். ۞ கிப்லாவை நோக்கி கால்களை நீட்ட மாட்டார்கள். ۞ தலைப்பாகை அணிந்து தொழுகைகளைத் தொழுவார்கள். ۞ மிஸ்வாக் செய்வார்கள். ۞ அவர்களின் வெளிப்பகுதியும் உள்மனமும் ஒன்றாகவே இருந்தது; உள்ளத்தில் என்ன இருக்குமோ, அதைத்தான் நாவிலும் கொண்டு வருவார்கள், நாவினால் எதைக் கூறுவார்களோ, அதன்படி அமலும் செய்வார்கள். ۞ மார்க்க விஷயங்களில் யாருக்கும் எவ்வித சலுகையும் (அதாவது பாரபட்சமும்) காட்ட மாட்டார்கள். ۞ நாயகத்தின் ஆஷிகீன்களான உலமாக்களை (மார்க்க அறிஞர்களை) சந்திக்கும் போது, அவர்களைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, அவர்களுக்குப் பெரும் மரியாதை அளிப்பார்கள். ۞ யாராவது சங்கையான பைத்துல்லாஹ்வின் ஹஜ் கடமையை நிறைவேற்றிவிட்டு அவர்களின் சமூகத்திற்கு வருகை தந்தால், அவரிடம் முதலில், "அகிலத்தின் தலைவரான அண்ணல் நபி صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَ آلِهٖ وَ سَلَّم அன்னவர்களின் புகலிடமான சமூகத்திற்குச் சென்று வந்தீர்களா?" என்று கேட்பார்கள். அவர் 'ஆம்' என்று கூறினால், உடனே அவரது பாதங்களை முத்தமிடுவார்கள். ۞ மீலாதுன் நபி (நபிகள் நாயகத்தின் பிறந்தநாள்) விழாவில் ஆரம்பம் முதல் இறுதி வரை அத்தஹிய்யாத் அமர்வில் (இரு முழங்கால்களையும் மடக்கி) அமர்ந்திருப்பார்கள், இறுதியில் ஸலவாத்தும் ஸலாமும் ஓதும் போது மட்டுமே எழுந்து நிற்பார்கள். ۞ அவர்களின் இல்லத்து வாசலில் இருந்து எந்தவொரு தேவையுடையவரும்

வெறுங்கையோடு திரும்புவதில்லை. (ஃபைZஸானே அஃலா ஹழ்ரத், பக்கம்: 112, 113)

அல்லாஹ் தஆலா நமக்கும் இத்தகைய அழகான நல்ல பழக்கவழக்கங்களை நம் வாழ்வில் பின்பற்றுவதற்கும், சுன்னத்துகளைக் கற்றுக்கொண்டு, அதனை மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்கும் பாக்கியத்தையும் வழங்குவானாக.

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! الحمد لله! மகிழ்ச்சிகள் நிறைந்த ரபிஉல் அவ்வல் மாதம் வரவிருக்கின்றது. அமீரே அஹ்லுஸ் ஸுன்னத், ஹழ்ரத் அல்லாமா மவ்லானா முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்கள், மீலாத் விழாவைக் கொண்டாடும் ஆஷிகானே மீலாதுகளுக்கு (நபிகள் நாயகத்தின் நேசர்களுக்கு) தங்களின் கடிதத்தின் (Letter) வாயிலாக சில முக்கியக் குறிப்புகளை வழங்கியுள்ளார்கள். வாருங்கள்! சில குறிப்புகளை நாமும் கேட்டறிவோம்.

அத்தாரின் கடிதத்தின் முக்கியக் குறிப்புகள்

(1) பிறை இரவன்று மஸ்ஜிதுகளில் இந்த வார்த்தைகளைக் கொண்டு மூன்று (3) முறை அறிவிப்புச் செய்ய வையுங்கள்: "அனைத்து நாயகத்தின் நேசர்களுக்கு வாழ்த்துகள், சங்கையான ரபிஉல் அவ்வல் மாதத்தின் பிறை தென்பட்டு விட்டது."

(2) மேற்பார்வையாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் உட்பட அனைத்து நாயகத்தின் நேசர்களும் ரபிஉல் அவ்வல் ஷரீஃபில் பிரத்தியேகமாக குறைந்தபட்சம் மூன்று (3) நாட்கள் காஃபிலாவில் பயணம் செய்யும் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். மேலும் இஸ்லாமிய சகோதரிகள் ஒரு மாதம் வரை தினமும் வீட்டிற்குள் (அதாவது வீட்டின் இஸ்லாமிய

சகோதரிகள் மற்றும் மஹ்ரம்களுக்கு மத்தியில் மாத்திரம்) 'மதனி தர்ஸ்' நடத்த வேண்டும், மேலும் எதிர்வரும் காலங்களிலும் அதனைத் தினமும் தொடர்வதற்கு நிய்யத் செய்துக்கொள்ளுங்கள்.

(3) கொடியில் நஃலே பாக் (நபிகள் நாயகத்தின் புனித பாதணி) முத்திரை அல்லது ஏதேனும் எழுத்துக்கள் இருந்தால், அது கிழிந்து நாராகிவிடக் கூடாது என்பதிலும், தரையில் விழுந்து விடக்கூடாது என்பதிலும் கவனமாக இருங்கள். மேலும், ரபிஉல் அவ்வல் மாதம் முடிந்தவுடன் அதனை உடனடியாக இறக்கி விடுங்கள். உங்களால் பாதுகாக்க முடியாமல், மரியாதை குறைவு ஏற்பட்டு விடும் என்ற அச்சம் இருந்தால், சாதாரண மதனி கொடியை ஏற்றுங்கள். (அமீரெ அஹ்லுஸ் ஸுன்னத் عُفِیَ عَنْہ அவர்களும் தனது இல்லத்தில் சாதாரண மதனி கொடியையே ஏற்றுகிறார்கள்.)

(4) மக்தBபதுல் மதீனாவால் வெளியிடப்பட்ட "மீலாத் விழாவின் 12 குறிப்புகள்" என்ற பிரசுரத்தை (Pamphlet) முடிந்தால் 112, இல்லையெனில் குறைந்தபட்சம் 12 பிரதிகளாவது, அதேபோல் சாத்தியமானால் "விடிகாலை வசந்தம்" எனும் சிறுநூலின் 12 பிரதிகளை மக்தBபதுல் மதீனாவில் இருந்து விலைக்கு வாங்கி விநியோகம் செய்யுங்கள். குறிப்பாக, நபிகள் நாயகத்தின் صَلَّی اللّٰہُ عَلَیْہِ وَ آلِہٖ وَ سَلَّم பிறந்தநாள் விழாக்களை விமரிசையாக ஏற்பாடு செய்யும் அமைப்புகளின் தலைவர்களிடம் இவற்றைச் கொண்டு போய்ச் சேர்க்கவும்.

(5) ரபிஉல் அவ்வல் 12-ஆம் இரவை மீலாத் இஜ்திமாவில் கழித்து விட்டு, சுப்ஹு ஸாதிக் (அதிகாலை) வேளையில் உங்களுடைய கரங்களில் மதனி கொடிகளை ஏந்தி, ஸலவாத்

மற்றும் ஸலாமுடன், கண்ணீர் மல்கும் கண்களுடன் விடிகாலை வசந்தத்தை (சுப்ஹே பஹாராவை) வரவேற்கவும். ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு, ஸலாம் மற்றும் ஈத் முபாரக் கூறி ஒருவரையொருவர் நல்வாழ்த்துகளுடன் கட்டித்தழுவி சந்தித்துக் கொள்ளுங்கள்; மேலும் நாள் முழுவதும் பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டும், பெருநாள் மகிழ்ச்சியைப் பகிர்ந்துக் கொண்டும் இருங்கள்.

(6) அன்பான வள்ளல் நபி صَلَّى اللهُ عَلَيْهِ وَ اٰلِهٖ وَ سَلَّم அன்னவர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் நோன்பு நோற்று தங்களின் பிறந்த நாளைக் கொண்டாடி வந்தார்கள். நீங்களும் நபிகள் நாயகம் صَلَّى اللهُ عَلَيْهِ وَ اٰلِهٖ وَ سَلَّم அன்னவர்களின் நினைவோடு ரபிஉல் அவ்வல் 12ல் நோன்பு நோற்று, மதனி கொடியை ஏந்தியவாறு மீலாத் ஊர்வலத்தில் (ஜுலூஸில்) பங்கெடுங்கள். முடியுமான வரை வுழுவுடன் இருங்கள். உதடுகளில் கஸீதாக்கள், ஸலவாத் மற்றும் ஸலாமினை மொழிந்தவர்களாக, பார்வைகளை தாழ்த்தியவாறு கண்ணியமான முறையில் நடந்துச் செல்லுங்கள். அங்குமிங்கும் குதித்து அநாகரிகமாக நடந்து, யாருக்கும் விமர்சிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து விடாதீர்கள்.

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

நல்அமல் எண் 12-க்கான ஆர்வமூட்டுதல்

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! அஃலா ஹழ்ரத் அவர்களின் அருட்கொடையை அடைந்துக் கொள்வதற்காக, தஃவதே இஸ்லாமியின் மார்க்கச் சூழலோடு இணைந்துக் கொள்ளுங்கள்! 12 மார்க்கப் பணிகளில் மிக உற்சாகமாக நடைமுறை ரீதியாக பங்கெடுங்கள்.! اِنْ شَآءَ اللهُ الْكَرِيْم! தீன் மற்றும்

துன்யாவின் ஏராளமான பரகத்துகள் உங்களுக்குக் கிடைக்கும். கவலைமிக்க விடயம்! சுயநலம் மிக்க இன்றைய காலகட்டத்தில், மார்க்கக் கல்வியை கற்பதற்கு மக்களிடம் நேரமில்லை. الحمد لله! தற்காலத்தின் கல்வி மற்றும் ஆன்மீக வழிகாட்டியான ஷெய்கே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத் دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்கள், குழப்பங்கள் நிறைந்த இக்காலத்தில் பாவங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கும், நன்மைகள் செய்வதற்கும் மற்றும் எளிதாக மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொள்வதற்கும் "72 நல் அமல்கள்" என்ற பெயரிலான பதிவேட்டை நமக்கு வழங்கியுள்ளார்கள். இந்த நல்அமல்களில் 12-வது நல்அமல் என்னவென்றால்: இன்று நீங்கள் அஃலா ஹழ்ரத் رَحمَةُ اللهِ عَلَيْه அல்லது மக்தBபதுல் மதீனாவின் ஏதேனும் புத்தகம் அல்லது சிறநூலை அல்லது "ஃபைZஸானே மதீனா மாதஇதழை" குறைந்தபட்சம் 12 நிமிடங்களாவது படித்தீர்களா அல்லது கேட்டீர்களா? இந்த நல்அமலைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் நமது கல்வியில் அபிவிருத்தி ஏற்படும், மார்க்கக் கல்வியைக் கற்பதன் சிறப்புகளும் பரகத்துகளும் நஸீபாகும். அல்லாஹ் தஆலா நமக்கு அமல் செய்யும் பாக்கியத்தை வழங்குவானாக.

اٰمِيْن بِجَاهِ خَاتَمِ النَّبِيّٖن صَلَّى اللهُ عَلَيْهِ وَ آلِهٖ وَسَلَّم

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

நகங்கள் வெட்டுவதின் சுன்னத்துகளும், ஒழுக்கங்களும்

வாருங்கள்! ஷேகே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத் دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்களின் "101 மதனி முத்துக்கள் என்ற சிறுநூலிலிருந்து நகம் வெட்டுவதின் சுன்னத்துகளையும் மற்றும் ஒழுக்கங்களையும் கேட்போம்:

☆ ஜுமுஆ (வெள்ளிக்கிழமை) அன்று நகங்கள் (Nails) வெட்டுவது முஸ்தஹப் (விருப்பத்தக்கது) ஆகும். ஆம், நகங்கள் அதிகமாக வளர்ந்திருந்தால், ஜுமுஆ வரும் வரை காத்திருக்க வேண்டாம். (துர்ரெ முக்தார், கிதாபுல் ஹழ்ரி வல் இபாஹா, பாபுல் இஸ்திப்ரா வ மைருஹு, 9/668)

ஸத்ருஷ் ஷரீஆ மவ்லானா அம்ஜத் அலி அஃளமி رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: அறிவிக்கப்பட்டுள்ளது, "யார் ஜுமுஆ நாளில் நகங்களை வெட்டுகிறாரோ, அல்லாஹ் கரீம் அவரை அடுத்த ஜுமுஆ வரை முசீபத்துகளில் (துன்பங்களிலிருந்து) பாதுகாப்பாக வைப்பான். மேலும் மூன்று நாட்கள் சேர்த்து, அதாவது பத்து நாட்கள் வரை." (முஃஜம் அவ்ஸத், 3/328, ஹதீஸ்: 4746 - பஹாரே ஷரீஅத், 3/583, பாகம்: 16)

மற்றொரு அறிவிப்பில், "யார் ஜுமுஆ நாளில் நகம் வெட்டுகிறாரோ, ரஹ்மத் இறங்கும் மேலும் பாவங்கள் நீங்கும்" என்றும் வந்துள்ளது. (உம்ததுல் காரீ, கிதாபுல் லிபாஸ், பாபு தக்லீமில் அள்பார், 15/90)

☆ கைகளின் நகங்களை வெட்டுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ள முறையின் சுருக்கம் இதோ: முதலில் வலது கையின் ஆள்காட்டி விரலிலிருந்து (Shahadat Finger) தொடங்கி, வரிசைப்படி சுண்டு

விரல் (சிறிய விரல்) வரை நகங்கள் வெட்டப்பட வேண்டும், ஆனால் பெருவிரலை விட்டுவிட வேண்டும். இப்போது இடது கையின் சுண்டு விரலிலிருந்து (சிறிய விரலிலிருந்து) தொடங்கி, வரிசைப்படி பெருவிரல் உட்பட நகங்களை வெட்டிக் கொள்ளுங்கள். இப்போது இறுதியாக, வலது கையின் பெருவிரல் நகத்தை வெட்ட வேண்டும். (இஹ்யாஉல் உலூம், கிதாபு அஸ்ராரித் தஹாரா, அல்கிஸ்முஸ் ஸாலிஸு ஃபின் நளாஃபத் 1/193)

☆ கால்களின் நகங்களை வெட்டுவதற்கு எந்த ஒரு குறிப்பிட்ட வரிசை முறையும் இடம்பெறவில்லை, எனினும் சிறந்த முறை என்னவென்றால்: வலது காலின் சுண்டு விரலிலிருந்து தொடங்கி, வரிசைப்படி பெருவிரல் உட்பட நகங்களை வெட்டிக் கொள்ளுங்கள்; பிறகு இடது காலின் பெருவிரலிலிருந்து தொடங்கி, சுண்டு விரல்வரை நகங்களை வெட்டிக் கொள்ளுங்கள். (இஹ்யாஉல் உலூம், கிதாபு அஸ்ராரித் தஹாரா, அல்கிஸ்முஸ் ஸாலிஸு ஃபின் நளாஃபத் 1/193)

☆ ஜனாபத் நிலையில் (அதாவது குளிப்பு கடமையாக இருக்கும் நிலையில்) நகம் வெட்டுவது மக்ரூஹ் (வெறுக்கத்தக்கது) ஆகும். (ஃபதாவா ஹிந்தியா, கிதாபுல் கராஹிய்யா 5/358)

☆ பற்களால் நகங்களை கடிப்பது மக்ரூஹ் ஆகும், மேலும் இதனால் தொழுநோய் போன்றது ஏற்படும் அபாயம் உள்ளது. (ஃபதாவா ஹிந்தியா, கிதாபுல் கராஹிய்யா 5/358)

☆ நகங்களை வெட்டிய பிறகு, அவற்றை மண்ணில் புதைத்து விடுங்கள். (ஃபதாவா ஹிந்தியா, கிதாபுல் கராஹிய்யா 5/358)

பல்வேறு ஆயிரக்கணக்கான சுன்னத்துகளைக் கற்றுக் கொள்வதற்காக, மக்தBபத்துல் மதீனாவின் 2 புத்தகங்களான

"Bபஹாரே ஷரீஅத்" பாகம் 16 (312 பக்கங்கள்), இன்னும் 120 பக்கங்களைக் கொண்ட "சுன்னத்துகளும் ஒழுக்கங்களும்" என்ற புத்தகங்களையும் மேலும் "163 மதனி முத்துக்கள்" இன்னும் "101 மதனி முத்துக்கள்" ஆகிய இரண்டு சிறுநூல்களையும் வாங்கிப் படியுங்கள்.

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

மZஸாராத்துகளுக்கு சமூகமளிப்பதன் ஒழுக்கங்கள்

அன்பான இஸ்லாமிய சகோதரர்களே! வாருங்கள்! மக்தBபதுல் மதீனாவின் சிறுநூலான "மZஸாராதே அவ்லியா கி ஹிகாயாத்" என்பதிலிருந்து மZஸாராத்துகளுக்கு சமூகமளிப்பதன் முறை மற்றும் அதன் மதனி முத்துக்களைக் கேட்போம்:

சங்கையான அவ்லியாக்களின் رَحْمَةُ اللهِ عَلَيْهِم اجمعين புனிதமிக்க மZஸாராத்துகளுக்கு சமூகமளிப்பதும், அவர்களிடமிருந்து ஃபைZஸ் (அருளாசி) பெறுவதும் முன்னோர்களின் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. எவ்வாறெனில், ஹன்பலி ஃபிக்ஹைப் பின்பற்றுபவர்களின் ஷெய்கான இமாம் கல்லால் رَحمةُ اللهِ عَلَيْه அவர்கள் கூறுகிறார்கள்: "எனக்கு எப்போதெல்லாம் ஏதேனும் ஒரு காரியம் அல்லது சிக்கல் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் நான் இமாம் மூஸா காழிம் பின் ஜஃபர் சாதிக் رَضِیَ اللهُ عَنْهُ அவர்களின் மZஸாருக்குச் சென்று அவர்களின் வஸீலாவை முன்வைப்பேன். அல்லாஹ் கரீம் எனது கஷ்டத்தை எளிதாக்கி, நான் நாடியதை எனக்குத் தந்து விடுகிறான்." (தாரீகே பக்தாத், 1/133)

☆ ஹழ்ரத் இமாம் ஷாஃபிஈ رَحمَۃُ اللہِ عَلَیۡہ அவர்கள் கூறுகிறார்கள்: "எனக்கு ஏதேனும் ஒரு தேவை ஏற்படும்போது, நான் இரண்டு ரக்அத்கள் தொழுது விட்டு, இமாமே அஃளம் அபூ ஹனீஃபா رَحمَۃُ اللہِ عَلَیۡہ அவர்களின் மZஸாருக்குச் சென்று துஆக் கேட்பேன்; அல்லாஹ் கரீம் எனது தேவையை நிறைவேற்றித் தருகிறான்." (அல் கைராதுல் ஹிஸான், பக்கம்: 230)

(யாரேனும் ஒருவர் இறைநேசரின் மZஸார் ஷரீஃபிற்கு அல்லது) எந்தவொரு முஸ்லிமின் கப்ரை Zஸியாரத் செய்வதற்கு செல்ல விரும்பினால், முஸ்தஹப் (விருப்பத்தக்கது) என்னவென்றால்: முதலில் தனது இல்லத்தில் (மக்ரூஹ் இல்லாத நேரத்தில்) இரண்டு (2) ரக்அத் நஃபில் தொழ வேண்டும். ஒவ்வொரு ரக்அத்திலும் சூரத்துல் ஃபாத்திஹாவிற்குப் பிறகு ஒரு (1) முறை ஆயத்துல் குர்ஸியையும், மூன்று (3) முறை சூரத்துல் இக்லாஸையும் ஓதி, அந்தத் தொழுகையின் நன்மையை அந்த கப்ருடையாருக்கு அனுப்ப வேண்டும். அல்லாஹ் கரீம் மரணித்த அந்த அடியாரின் கப்ரிலே ஒளியை ஏற்படுத்துவான், மேலும் இந்த (நன்மையை அனுப்பிய) நபருக்கு மிக அதிகமான நன்மையை வழங்குவான். (ஃபதாவா ஆலம்கீரி, 5/350)

அறிவிப்பு

மZஸாராத்துகளுக்கு சமூகமளிப்பதன் மீதமுள்ள ஒழுக்கங்கள் தர்பிய்யத் ஹல்காக்களில் விவரிக்கப்படும், எனவே அவற்றை அறிந்துக் கொள்வதற்காக தர்பிய்யத் ஹல்காக்களில் கண்டிப்பாக கலந்துக் கொள்ளுங்கள்.

صَلُّوۡا عَلَی الۡحَبِیۡب! صَلَّی اللہُ عَلٰی مُحَمَّد

தஃவதே இஸ்லாமியின் வாராந்திர சுன்னத்துக்கள் நிறைந்த இஜ்திமாவில் ஓதப்படும் 6 ஸலவாத்களும் 2 துஆக்களும்

(1) வெள்ளிக்கிழமை இரவின் ஸலவாத்

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِنِ النَّبِيِّ الْاُمِّيِّ
الْحَبِيْبِ الْعَالِى الْقَدْرِ الْعَظِيْمِ الْجَاهِ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ

மகான்கள் கூறியுள்ளார்கள்: எவரொருவர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவில் (வியாழன் மற்றும் வெள்ளிக்கு இடைப்பட்ட இரவில்) இந்த ஸலவாத்தை தவறாமல் குறைந்தபட்சம் ஒரு முறையாவது ஓதுவாரோ, அவர் மரணத்தின் போது மதீனத்து பேரரசர் பெருமானார் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّمَ அன்னவர்களின் தரிசனத்தைப் பெறுவார். மேலும் கப்ரில் நுழையும் போதும், எந்தளவுக்கு என்றால், மதீனத்துப் பேரரசர் மாநபி صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّمَ அன்னவர்கள் தனது கருணை நிறைந்த கரங்களால் அவரை கப்ரில் இறக்குவதையும் அவர் காண்பார். (அஃபழலுஸ் ஸலவாத் அலா ஸய்யிதிஸ் ஸாதாத், பக். 151 சுருக்கம்)

(2) அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படும்

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَسَلِّمْ

ஹழ்ரத் அனஸ் رَضِیَ اللهُ عَنْهُ அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது, மதீனத்து மாவேந்தர் மாநபி صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّمَ அன்னவர்கள் நவின்றுள்ளார்கள்: எவரொருவர் இந்த ஸலவாத்தை ஓதுவாரோ, அவர் நின்றுக்கொண்டிருந்தால் உட்காருவதற்கு முன்பாகவும், உட்கார்ந்திருந்தால் எழுந்து நிற்பதற்கு முன்பாகவும் அவருடைய

பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும். (அஃப்ழலுஸ் ஸலவாத் அலா ஸய்யிதிஸ் ஸாதாத், பக். 65)

(3) ரஹ்மத்தின் எழுபது வாசல்கள்

صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّد

எவரொருவர் இந்த ஸலவாத்தை ஓதுகிறாரோ, அவர் மீது ரஹ்மத்தின் 70 வாசல்கள் திறக்கப்படுகின்றன.

(அல்கவ்லுல் பதீஃ, அல்பாபுஸ் ஸானீ, பக். 277)

(4) ஆறு லட்சம் ஸலவாத்தின் நன்மை

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ عَدَدَ مَا فِيْ عِلْمِ اللّٰهِ صَلَاةً دَآئِمَةً بِدَوَامِ مُلْكِ اللّٰه

ஹழ்ரத் அஹ்மத் ஸாவி رَحْمَةُ اللهِ عَلَيْه அவர்கள் சில பெரியார்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்: இந்த ஸலவாத்தை ஒரு முறை ஓதுவதன் மூலம் ஆறு லட்சம் ஸலவாத் ஓதிய நன்மை கிடைக்கிறது. (அஃப்ழலுஸ் ஸலவாத் அலா ஸய்யிதிஸ் ஸாதாத், பக். 149)

(5) முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் நெருக்கம்

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ كَمَا تُحِبُّ وَتَرْضٰى لَهٗ

ஒரு நாள் ஒரு மனிதர் வந்தார், அப்போது பெருமானார் صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அவரை தமக்கும் அபூபக்கர் ஸித்தீக் رَضِیَ اللهُ عَنْهُ அவர்களுக்கும் இடையில் அமர வைத்தார்கள். இதனால் ஸஹாபாப் பெருமக்கள் رَضِیَ اللهُ عَنْهُم அவர்களுக்கு, இவ்வளவு கண்ணியமிக்க பதவியில் இருக்கும் நபர் யார்! என்று ஆச்சரியம்

ஏற்பட்டது. அவர் சென்றுவிட்ட போது, பெருமானார் صَلَّى اللهُ عَلَيْهِ واٰلِهٖ وَسَلَّمَ அன்னவர்கள் கூறினார்கள்: இவர் என் மீது ஸலவாத் ஓதும்போது, இவ்வாறு ஓதுகிறார். (அல்கவ்லுல் பதீஃ, அல்பாபுல் அவ்வல், பக். 125)

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

(6) ஷஃபாஅத் (பரிந்துரையின்) ஸலவாத்

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاَنْزِلْهُ الْمَقْعَدَ الْمُقَرَّبَ عِنْدَكَ يَوْمَ الْقِيَامَةِ

உம்மத்தினருக்கு பரிந்துரை செய்பவரான பெருமானார் صَلَّى اللهُ عَلَيْهِ واٰلِهٖ وَسَلَّمَ அன்னவர்களின் மகத்தான பொன்மொழி: எவரொருவர் இவ்வாறு ஸலவாத் ஓதுகிறாரோ, அவருக்கு எனது ஷஃபாஅத் (பரிந்துரை) கடமையாகி விடுகிறது." (அத்தர்ஙீப் வத்தர்ஹீப், பாகம் 2, பக். 329, ஹதீஸ்: 31)

(1) ஆயிரம் நாட்களின் நன்மைகள்

جَزَى اللهُ عَنَّا مُحَمَّدًا مَّا هُوَ اَهْلُهٗ

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் رَضِیَ اللهُ عَنْهُمَا அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது, மதீனத்து மாமன்னர் மாநபி صَلَّى اللهُ عَلَيْهِ واٰلِهٖ وَسَلَّمَ அன்னவர்கள் கூறினார்கள்: இதனை ஓதுபவருக்காக எழுபது மலக்குகள் ஆயிரம் நாட்கள் வரை நன்மைகளை எழுதுகிறார்கள். (மஜ்மஉஸ் Zஸவாஇத், கிதாபுல் அத்இயா, 10/254, ஹதீஸ்: 17305)

(2) லைலத்துல் கத்ர் இரவை அடைந்து விட்டது போலாகும்

முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّمَ அன்னவர்களின் பொன்மொழி: யார் இந்த துஆவை 3 முறை ஓதுகிறாரோ, அவர் லைலத்துல் கத்ர் இரவை அடைந்தவரைப் போலாகும். (தாரீக் இப்னு அஸாகிர், 19/155, ஹதீஸ்: 4415)

لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ الْحَلِيْمُ الْكَرِيْمُ، سُبْحٰنَ اللّٰهِ رَبِّ السَّمٰوٰتِ السَّبْعِ وَرَبِّ الْعَرْشِ الْعَظِيْمِ

(நம்பிக்கைக்குரிய மற்றும் கண்ணியமிக்க அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, அல்லாஹ் தூய்மையானவன், அவன் ஏழு வானங்களுக்கும் மற்றும் மகத்தான அர்ஷுக்கும் அதிபதி ஆவான்.)

வாராந்திர இஜ்திமாக்களின் ஹல்காவின் அட்டவணை
(வெளிநாடு), 06 ஆகஸ்ட் 2026

(1): சுன்னத்துகளையும் ஒழுக்கங்களையும் கற்றல்: 5 நிமிடங்கள்,
(2): துஆ மனனம் செய்தல்: 5 நிமிடங்கள்,
(3): சுயபரிசோதனை (ஜாயிஸா): 5 நிமிடங்கள்,

மொத்த நேரம்: 15 நிமிடங்கள்

மZஸாராத்துகளுக்கு சமூகமளிப்பதன் மீதமுள்ள ஒழுக்கங்கள்

பிறகு, நல்ல நல்ல நிய்யத்துகளை செய்துக்கொண்ட பின் மZஸாரை நோக்கிப்புறப்பட வேண்டும். மேலும் (Zஸியாரத் செய்பவர் சங்கையான அவ்லியாக்களின் رَحِمَهُمُ اللهُ) புனிதமிக்க மZஸாராத்துகளுக்குச் செல்லும்போது, காலடிப்பகுதி வழியாகச்

செல்ல வேண்டும். மேலும், குறைந்தபட்சம் நான்கு (4) முழம் இடைவெளியில் முகத்திற்கு நேராக நின்று, நடுத்தரமான சத்தத்தில் (இவ்வாறு) ஸலாம் கூற வேண்டும்:

اَلسَّلَامُ عَلَيْكَ يَا سَيِّدِیْ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهٗ،

பிறகு "துரூதே Gகவ்ஸிய்யா" மூன்று முறையும், சூரத்துல் ஃபாத்திஹா ஒரு முறையும், ஆயத்துல் குர்ஸி ஒரு முறையும், சூரத்துல் இக்லாஸ் ஏழு முறையும், மீண்டும் "துரூதே Gகவ்ஸிய்யா" ஏழு முறையும் ஓத வேண்டும். இன்னும் நேரம் இருந்தால், சூரா யாஸீன் மற்றும் சூரா முல்க் ஆகியவற்றையும் ஓதி அல்லாஹ் கரீமிடம் துஆச் செய்யவும்: "யா அல்லாஹ்! இந்த ஓதுதலின் மூலமாக உனது பெருந்தன்மைக்குத் தகுந்தவாறு எனக்கு நன்மையை வழங்குவாயாக, எனது அமலுக்குத் தகுந்தவாறு அல்ல. மேலும், இதனை எனது சார்பாக இந்த அங்கீகரிக்கப்பட்ட அடியாருக்கு அன்பளிப்பாக சேர்த்துக் விடுவாயாக." பிறகு, மார்க்கம் அனுமதித்த நியாயமான தனது தேவை எதுவோ, அதற்காக துஆச் செய்ய வேண்டும். மேலும் மZஸாருடையாரின் ரூஹை அல்லாஹ் தஆலாவின் பேரவையில் தனக்கான வஸீலாவாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதன் பிறகு, அவ்வாறே ஸலாம் கூறி விட்டுத் திரும்ப வேண்டும். (ஃபதாவா ரளவிய்யா, 9/522)

☆ Zஸியாரத்தின் ஒழுக்கங்களைப் பேணியவாறு, அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காக மZஸாரை Zஸியாரத் செய்யுங்கள்.

☆சாத்தியமான வரை வுழுவுடன் இருங்கள்.

☆ Zஸியாரத்திற்காக செல்லும்போது வுழு செய்துக்கொண்டு செல்லுங்கள், மேலும் திக்ரு மற்றும் ஸலவாத்தை சதாவும் மொழிந்தவாறு இருங்கள். (மZஸாராதே அவ்லியா கி ஹிகாயாத், பக்கம்: 7)

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

☆ அறியாமையிலிருந்து பாதுகாப்புத்தேடும் துஆ:

தஃவதே இஸ்லாமியின் வாராந்திர சுன்னத்துகள் நிறைந்த இஜ்திமாவின் அட்டவணைப்படி "அறியாமையிலிருந்து பாதுகாப்பு தேடும் துஆ" மனனம் செய்து வைக்கப்படும். அந்த துஆ இதோ:

اَعُوْذُ بِاللهِ اَنْ اَكُوْنَ مِنَ الْجَاهِلِيْنَ

தர்ஜுமா கன்Zஸூல் இர்ஃபான்: "நான் அறியாதவர்களில் ஒருவனாகி விடுவதிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்." (ஃபைZஸானே துஆ, பக்கம்: 245)

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللهُ عَلٰى مُحَمَّد

☆ கூட்டு சுயபரிசோதனையின் முறை (72 நல்அமல்கள்)

முஸ்தஃபா صَلَّى اللهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் பொன்மொழி: (மறுமையின் விஷயத்தில்) ஒரு கணம் சிந்திப்பது 60 வருடங்கள் செய்யும் வணக்கத்தை விடச் சிறந்ததாகும். (ஜாமிஉஸ் ஸஙீர் லிஸ்ஸுயூத்தி, பக். 365, ஹதீஸ்: 5897)

வாருங்கள்! நல்அமல்களின் பதிவேட்டை நிரப்புவதற்கு முன், "நல்ல நல்ல நிய்யத்துகளைச்" செய்து கொள்வோம்.

(1) அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காக நானும் நல்அமல்களின் பதிவேட்டைக் கொண்டு சுயபரிசோதனை செய்வேன், மற்றவர்களுக்கும் இதன் மீது ஆர்வம் ஊட்டுவேன்.

(2) எந்த நல்அமல்கள் நிறைவேற்றப்பட்டனவோ, அதற்காக அல்லாஹ்விற்கு புகழாரம் (அதாவது நன்றி) செலுத்துவேன்.

(3) எவற்றைச் செய்ய முடியாமல் போனதோ, அதற்காக வருந்துவதோடு இனிவரும் காலங்களில் செய்ய முயற்சிப்பேன்.

(4) பாவங்களிலிருந்து பாதுகாக்கும் ஏதேனும் ஒரு நல்அமல் மீது அல்லாஹ் பாதுகாக்க வேண்டும் செயல்பட முடியாமல் போயிருந்தால், தவ்பா மற்றும் இஸ்திஃபார் செய்வதோடு, இனிவரும் காலங்களில் அந்தப் பாவத்தைச் செய்ய மாட்டேன் என்று உறுதிமொழி எடுப்பேன்.

(5) தேவையின்றி எனது நல்அமல்களைப் பற்றி (உதாரணமாக: இன்னின்ன அல்லது இத்தனை நல்அமல்களை நான் செய்துள்ளேன் என்று) வெளிப்படுத்த மாட்டேன்.

(6) எந்த நல்அமல்களைப் பின்னர் செய்ய முடியுமோ (உதாரணமாக: இன்று 313 முறை ஸலவாத் ஓதவில்லை என்றால்), அதனைப் பின்னரோ அல்லது நாளையோ செய்து முடிப்பேன்.

(7) நல்அமல்கள் பதிவேட்டை நிரப்புவதன் அசல் நோக்கத்தை (உதாரணமாக: இறையச்சம், தக்வா, ஒழுக்கங்களைச் சீரமைத்தல், தீனுடைய பணிகளில் முன்னேற்றம் போன்றவற்றை) அடைய முயற்சிப்பேன்.

(8) நாளையும் நல்அமல்களின் பதிவேட்டை நிரப்புவேன். (அதாவது செயல்களை சுயபரிசோதனை செய்வேன்)

(9) கடமைக்காகக் கட்டங்களை நிரப்பாமல், முறையான சுயபரிசோனையுடன் நல்அமல்கள் பதிவேட்டை நிரப்புவேன்.

இன்று எந்தெந்த நற்செயல்களைச் செய்யும் பாக்கியம் பெற்றீர்களோ, கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் சரி (அதாவது தலைக்கீழ் ரைட் மார்க்) குறியீடும், செய்யாத பட்சத்தில் (0) குறியீடும் இடவும்.

கவனம்: உங்களது பதிவேட்டை மட்டுமே கவனித்தவாறு சுயபரிசோதனை செய்யுங்கள்.

☆கூட்டு சுயபரிசோதனையின் முறை (72 நல்அமல்கள்)

தினசரி 56 நல்அமல்கள்:

(1) நல்ல நல்ல நிய்யத்துகள் செய்தீர்களா? (2) ஐந்து நேர தொழுகைகளையும் ஜமாஅத்துடன் நிறைவேற்றினீர்களா? (3) வீடு, கடைவீதி, மார்க்கெட் போன்ற எங்கு நீங்கள் இருந்தாலும், அங்கு தொழுகை நேரங்களில் தொழுகைக்கு முன்னதாக தொழுகையின் பக்கம் (மக்களை) அழைத்தீர்களா? (4) இரவில் சூரதுல் முல்க் ஓதினீர்களா அல்லது செவியுற்றீர்களா? (5) ஐந்து நேர தொழுகைகளுக்குப் பிறகு குறைந்தது ஒரு முறையாவது ஆயத்துல் குர்ஸி, சூரத்துல் இக்லாஸ் மற்றும் தஸ்பீஹ் பாத்திமா رَضِیَ اللّٰہُ عَنۡہَا ஓதினீர்களா? (6) கன்Zஸுல் ஈமான் மஅ கZஸாஇனுல் இர்ஃபான் அல்லது நூருல் இர்ஃபானிலிருந்து குறைந்த பட்சம் மூன்று வசனங்கள் பொருள் மற்றும் விளக்கவுரையுடன் படித்தீர்களா அல்லது கேட்டீர்களா? அல்லது ஸிராதுல் ஜினானிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு பக்கங்களை படித்தீர்களா அல்லது கேட்டீர்களா? (7) ஷஜராவின் அவ்ராத்களில் ஏதேனும் சிலவற்றை ஓதினீர்களா? (8) குறைந்தது 313 முறை ஸலவாத் ஓதினீர்களா? (9) கண்களை பாவங்களிலிருந்து (அதாவது தவறான பார்வை, திரைப்படங்கள், நாடகங்கள், மொபைலில் ஆபாசப் படங்கள் மற்றும் வீடியோக்கள், அந்நியப் பெண்கள் மற்றும் கசின்கள் (உறவினர்கள்) போன்றோரைப் பார்ப்பதிலிருந்து) பாதுகாத்தீர்களா? (10) காதுகளை

பாவங்களிலிருந்து அதாவது புறம் பேசுதல், இசை மற்றும் பாடல்கள், கெட்ட மற்றும் ஆபாசமான பேச்சுகள், மொபைலின் மியூசிக் ரிங்டோன் மற்றும் காலர் டியூன் போன்றவற்றைச் செவியுறுவதிலிருந்து பாதுகாத்தீர்களா?

(11) பாதையில் நடந்து செல்லும் போதோ அல்லது கார், பஸ் போன்ற வாகனங்களில் பயணம் செய்யும் போதோ வீணான பார்வைகளிலிருந்து உங்களைப் பாதுகாத்து, இன்று உங்களது பார்வைகளைத் தாழ்த்தி வைத்தீர்களா? மேலும் தேவையின்றி அங்குமிங்கும் பார்ப்பதிலிருந்து உங்களைத் தடுத்துக் கொண்டீர்களா? (12) அஃலா ஹழ்ரத் رَحۡمَةُ اللهِ عَلَيۡه அல்லது மக்தBபதுல் மதீனாவின் ஏதேனும் ஒரு புத்தகம் அல்லது சிறுநூல் அல்லது "ஃபைZஸானே மதீனா மாத இதழை" குறைந்தது 12 நிமிடங்கள் படித்தீர்களா அல்லது செவியுற்றீர்களா? (13) பேச்சுவார்த்தைகள், போன் உரையாடல்கள் மற்றும் வேலைகளை நிறுத்தி விட்டு அதான் மற்றும் இகாமத்திற்குப் பதில் கூறினீர்களா? (14) (வீட்டிலோ அல்லது வெளியிலோ) எவர் மீதாவது கோபம் வரும் பட்சத்தில் மௌனமாக இருந்து கோபத்திற்குச் சிகிச்சை அளித்தீர்களா அல்லது பேசிவிட்டீர்களா? (15) உங்களது செயல்களைச் சுயபரிசோதனை செய்தவாறு நல்அமல்களின் பதிவேட்டில் உள்ள கட்டங்களை நிரப்பினீர்களா? (16) "மர்கZஸி மஜ்லிஸே சூரா"வின் விதிமுறைகளின் படி உங்களது பொறுப்பாளருக்கு கீழ்ப்படிந்தீர்களா? (17) வீட்டிலும் வெளியிலும் ஒவ்வொரு சிறியவர் மற்றும் பெரியவரிடமும் நல்ல முறையில் அதாவது 'நீங்கள்', 'ஜனாப்' மற்றும் 'ஆம்' என்று கூறி உரையாடினீர்களா? (18) மத்ரஸதுல் மதீனா (பெரியவர்களுக்கான பிரிவில்) குர்ஆன் ஷரீஃப் ஓதினீர்களா அல்லது ஓதிக் கொடுத்தீர்களா? (19) இஷா ஜமாஅத்திற்குப் பிறகு இரண்டு மணி நேரத்திற்குள் உறங்குவதற்கு முயற்சி செய்தீர்களா? (20) தஃவதே இஸ்லாமியின் தீனுடைய பணிகளுக்கு உங்களது பொறுப்பாளர் கொடுத்த அட்டவணைப்படி குறைந்தது இரண்டு மணி நேரம் ஒதுக்கினீர்களா?

(21) ஸதாயே மதீனா (பஜ்ர் தொழுகைக்கு மக்களை எழுப்பும் பணி) செய்தீர்களா? (22) உங்களது வீட்டின் ஜன்னல்களிலிருந்து (தேவையின்றி) வெளியிலோ அல்லது மற்றவர்களின் கதவுகள் வழியாக அவர்களின் வீட்டிற்குள்ளோ எட்டிப் பார்ப்பதிலிருந்து தவிர்ந்திருக்க முயற்சி செய்தீர்களா? (23) உங்கள் இல்லத்தில் தர்ஸ் (வீட்டு தர்ஸ்) நடைபெற்றதா? அல்லது ஏதேனும் காரணத்தினால் நீங்கள் இல்லாத சமயத்தில் உங்களது வீட்டில் தர்ஸ் நிகழ்ந்ததா? (24) குறைந்தது ஒரு மதனி தர்ஸ் (பள்ளிவாசல், கடை, கடைவீதி போன்ற எங்கு வசதியோ அங்கு) கொடுத்தீர்களா அல்லது செவியுற்றீர்களா? (25) சுன்னத்தான முறைப்படி ஆடைகளை (பெண்களின் ஆடைகளைப் போன்ற பளிச்சென்ற நிறங்கள் அல்லது பளபளப்பானதாக இல்லாத, அல்லது மார்க்க ரீதியாகத் தடைசெய்யப்பட்ட நிறங்கள் இல்லாதவாறு) அணிந்தீர்களா? (26) தலைமுடி (ஸுல்ஃபே) வைக்கும் சுன்னத்தைப் பேணுகிறீர்களா? (27) தாடியை மழிப்பதோ அல்லது ஒரு பிடிக்குக் குறைவாக வெட்டுவது போன்ற பாவத்தைச் செய்யவில்லையே? (28) ஏதேனும் பாவம் நிகழ்ந்து விட்டால் உடனே தவ்பா செய்தீர்களா? (29) சுன்னத்தான முறைப்படி உணவு உட்கொண்டீர்களா மேலும் உணவிற்கு முன்னும் பின்னும் ஓதும் துஆக்களை ஓதினீர்களா? (30) வீடு, அலுவலகம், பஸ், ரயில் போன்றவற்றில் செல்லும் போதும் வரும் போதும், மற்றும் தெருக்களில் கடந்து செல்லும் போதும் அங்கு நின்று கொண்டிருக்கின்ற அல்லது அமர்ந்திருக்கின்ற முஸ்லிம்களுக்கு ஸலாம் கூறினீர்களா?

(31) இந்த சுன்னத்துகளில் ஏதேனும் சிலவற்றைச் செயல் படுத்தினீர்களா? (மிஸ்வாக் செய்தல், வீட்டிற்குள் நுழைதல் மற்றும் வெளியேறுதல், உறங்குதல் மற்றும் விழித்தல், கிப்லா நோக்கி அமருதல் போன்றவைகள்)? (32) ளுஹர் தொழுகையின் நான்கு முந்தைய சுன்னத்துகளை ஃபர்ளு தொழுகைக்கு முன் நிறை வேற்றினீர்களா? (33) தஹஜ்ஜுத் தொழுகை தொழுதீர்களா? அல்லது இரவில் உறங்காத பட்சத்தில் ஸலாத்துல் லைல் நிறைவேற்றினீர்களா?

(34) அவ்வாபீன் அல்லது இஷ்ராக் மற்றும் ச்சாஷ்த் ஆகிய நஃபில் தொழுகைகளைத் தொழுதீர்களா? (35) இன்று நீங்கள் அஸர் அல்லது இஷா தொழுகைக்கு முந்தைய சுன்னத்துகளைத் தொழுதீர்களா? (36) தனித்துவ முயற்சியின் மூலமாக தஃவதே இஸ்லாமியின் 12 தீனுடைய பணிகளில் குறைந்தது ஒரு தீனுடைய பணியின் பக்கமாவது ஆர்வம் ஊட்டினீர்களா? (37) மற்றவர்களிடம் இரவலாகக் கேட்டு ஏதேனும் ஒரு பொருளை (உதாரணமாக: செருப்பு, சால்வை, மொபைல் போன், சார்ஜர், வாகனம் போன்றவை) பயன்படுத்த வில்லையே? (38) பொய் பேசுதல், புறம் பேசுதல், கோள் மூட்டுதல்/ அதைச் செவியுறுவதிலிருந்து பாதுகாப்பாக இருந்தீர்களா? (39) குறிப்பிட்ட நேரமாவது "மதனி சேனல்" பார்த்தீர்களா? (40) எவரேனும் ஒருவர் அல்லது சிலருடன் உலக ரீதியாக தனிப்பட்ட நட்பு வைத்துள்ளீர்களா?

(41) கடன் இருக்கும் பட்சத்தில் (அதைத் திருப்பிச் செலுத்தும் வசதி இருந்தும்) கடன் கொடுத்தவரின் அனுமதியின்றி கடனைத் திருப்பிச் செலுத்துவதில் தாமதம் செய்யவில்லையே? மேலும் யாரிடமாவது தற்காலிகமாக (Temporary) வாங்கிய பொருளைத் தேவை முடிந்தவுடன் குறிப்பிட்ட நேரத்திற்குள் திருப்பிக் கொடுத்து விட்டீர்களா? (42) இன்று நீங்கள் மனசாட்சிக்கு விரோதமாக பணிவான வார்த்தைகளை கூறி நயவஞ்சகம், முகஸ்துதி போன்ற பாவத்தை செய்ய வில்லையே? உதாரணமாக மக்கள் மனதில் தன் கண்ணியத்தை உருவாக்குவதற்காக ‘‘நான் அற்பமானவன், மிக மோசமானவன்’’ என்று கூறுவது. ஆனால் உள்ளத்தில் அவ்வாறு நினைப்பதில்லை. (43) சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பேணக் கூடியவராகவும், மரியாதையுடையவராகவும் இருக்கிறீர்களா? (44) ஒரு முஸ்லிமின் குறை வெளிப்பட்டு விடும்போது (மார்க்க ரீதியான அனுமதியின்றி) அவரது குறையை மற்றவரிடத்தில் வெளிப்படுத்த வில்லையே? (45) தஃப்சீர் செவியேற்கும் மற்றும் செவியேற்கச் செய்யும் அமர்வை நடத்தினீர்களா அல்லது அதில் பங்கெடுத்தீர்களா? (46) ஒவ்வொரு அனுமதிக்கப்பட்ட மற்றும் கண்ணியமான காரியத்திற்கு முன்பும் பிஸ்மில்லாஹ் ஓதினீர்களா? (47) நாற்சந்தியில் நடாத்தப்படும் தர்ஸை கொடுத்தீர்களா அல்லது செவியுற்றீர்களா?

(48) உங்களது பெற்றோர்கள் இன்னும் ஆன்மீக குருவின் (ஷெய்கின்) பாவமன்னிப்பிற்காக துஆ மற்றும் ஈஸாலே ஸவாப் (நன்மையைச் சேர்த்தல்) செய்தீர்களா? (49) மஸ்ஜித், வீடு, அலுவலகம் போன்றவற்றில் வீண் விரயம் செய்வதிலிருந்து தவிர்ந்திருக்க முயற்சி செய்தீர்களா? (50) போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்தீர்களா?

(51) ஏதேனும் ஒரு இஸ்லாமிய சகோதரரிடமிருந்து (குறிப்பாக பொறுப்பாளரிடமிருந்து) அல்லாஹ் பாதுகாக்க வேண்டும், ஏதேனும் தவறு நிகழ்ந்து அதனைச் சீர்திருத்த வேண்டிய தேவை ஏற்பட்டால், எழுத்துப்பூர்வமாகவோ அல்லது சந்தித்தோ, நேரடியாக (மென்மையாக) புரிய வைக்க முயற்சி செய்தீர்களா? அல்லது அல்லாஹ் பாதுகாக்க வேண்டும், மார்க்க அனுமதியின்றி அதனை மற்றவர்களிடம் வெளிப்படுத்தி புறம் பேசுதல் என்ற பெரும்பாவத்தைச் செய்து விட்டீர்களா? (52) நாவை பாவங்களிலிருந்து (அதாவது பழிசுமத்துதல், உள்ளத்தை காயப்படுத்துதல், கெட்ட வார்த்தைகள் பேசுதல் போன்றவற்றிலிருந்து) பாதுகாத்தீர்களா? (53) நாவை வீணான பேச்சுகளிலிருந்து (அதாவது தீனுக்கோ அல்லது உலகிற்கோ பிரயோஜனம் தராத உரையாடல்களிலிருந்து) பாதுகாக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காகச் சைகை மூலமாக ஏதேனும் உரையாடினீர்களா? (54) (வீட்டிலும் வெளியிலும்) கேலி கிண்டல் செய்தல், நையாண்டி செய்தல், உள்ளங்களை காயப்படுத்துதல் மற்றும் வாய்விட்டு உரக்கச் சிரித்தல் (கலகலவெனச் சிரித்தல்) போன்றவற்றிலிருந்து தவிர்ந்திருக்க முயற்சி செய்தீர்களா? (55) இமாமா ஷரீஃப் (தலைப்பாகை) அணிந்தீர்களா? (56) தாய், தந்தைக்குரிய மரியாதை மற்றும் கண்ணியத்தையும் பேணி நடந்தீர்களா?

குஃப்லே மதீனா செயற்திறன்

☆ எழுத்து மூலம் உரையாடுதல் 12 முறை ☆ சைகை மூலம் உரையாடுதல் 12 முறை ☆ உற்று நோக்காமல் உரையாடுதல் 12 முறை

வாராந்திர 10 நல்அமல்கள்

(57) இந்த வாரம் உங்களது இல்லத்திலிருந்து ஏதேனும் ஒரு இஸ்லாமிய சகோதரியை (உதாரணமாக: சகோதரி/ மகள்/ தாய்/ குழந்தைகளின் தாய் போன்றோரை) இஸ்லாமிய சகோதரிகளின் இஜ்திமாவிற்கு அனுப்பி வைத்தீர்களா? (58) வாராந்திர மதனி முzஸாகரா பார்ப்பதற்கு/ செவியுறுவதற்கான பாக்கியத்தைப் பெற்றீர்களா? (59) வாராந்திர சுன்னத்துகள் நிறைந்த இஜ்திமாவில் ஆரம்பம் முதல் இறுதி வரை (அதாவது மஃரிப் தொழுகை முதல் இஷ்ராக் மற்றும் ச்சாஷ்த் தொழுகை வரை) பங்கெடுத்தீர்களா? (60) இந்த வாரம் விடுமுறை நாள் இஃதிகாஃப் செய்யும் பாக்கியத்தைப் பெற்றீர்களா? (61) இந்த வாரம் குறைந்தது ஏதேனும் ஒரு நோயாளி அல்லது கவலையில் இருப்பவரை அவரது இல்லத்திற்கு அல்லது மருத்துவமனைக்குச் சென்று சுன்னத்தான முறைப்படி நலம் விசாரித்தீர்களா அல்லது ஆறுதல் கூறினீர்களா அல்லது உறவினரின் மரணத்திற்கு இரங்கல் தெரிவிப்பதை செய்தீர்களா? (62) இந்த வாரம் திங்கட்கிழமை (அல்லது அது விடுபட்டுப் போகும் பட்சத்தில் ஏதேனும் ஒரு நாளில்) நோன்பு நோற்றீர்களா? (63) வாராந்திர இதழை படித்தீர்களா அல்லது செவியுற்றீர்களா? (64) இந்த வாரம் குறைந்தது ஒரு முறையாவது வட்டாரப் பயணம் (Area Visit) செய்தீர்களா? (65) இந்த வாரம் குறைந்தது ஒரு இஸ்லாமிய சகோதரரையாவது (யார் இதற்கு முன்பு தீனுடைய சூழலில் இருந்தாரோ, அல்லது முன்பு இஜ்திமாவிற்கு வந்து தற்போது வராமல் இருக்கிறாரோ அவரைத்) தேடி, மீண்டும் அவரைத் தீனுடைய சூழலுடன் இணைக்க முயற்சி செய்தீர்களா? (66) வாராந்திர வட்டார அமர்வில் (ஹல்காவில்) பங்கெடுத்தீர்களா?

மாதாந்திர 3 நல்அமல்கள்

(67) கடந்த மாதத்தின் நல்அமல்கள் பதிவேட்டை முழுமையாக நிரப்பி, உங்களது நிர்வாகி அல்லது பொறுப்பாளரிடம் ஒப்படைத்து விட்டீர்களா? (68) இந்த மாதத்தில் நீங்கள் குறைந்தது மூன்று

நாட்கள் மதனி காஃபிலாவில் பயணம் செய்தீர்களா? (69) இந்த மாதத்தில் ஏதேனும் ஒரு சுன்னத் வல் ஜமாஅத் ஆலிமுக்கு (அல்லது பள்ளிவாசல் இமாம், முஅத்தின், பணியாளருக்கு) ஏதேனும் ஒரு வகையில் நிதியுதவி செய்தீர்களா?

வருடாந்திர 1 நல்அமல்

(70) இந்த ஆண்டு கால அட்டவணைப்படி ஒரு மாத காஃபிலாவில் பயணம் செய்தீர்களா?

வாழ்நாள் முழுவதுமான 2 நல்அமல்கள்

(71) வாழ்நாள் முழுவதின் பாடத்திட்டத்தை படித்து முடித்து விட்டீர்களா? (72) வாழ்க்கையில் இடைவிடாது (ஒரேயடியாக) 12 மாதங்கள் (பயணம் செய்யும் பாக்கியம்) மற்றும் பலதரப்பட்ட கோர்ஸ் (12 தீனுடைய வேலையின் கோர்ஸ், 7 நாட்களின் இஸ்லாஹே அஃமால் கோர்ஸ், 7 நாட்களின் பைZஸானெ நமாZஸ் கோர்ஸ்) களின் பாக்கியத்தை பெற்றீர்களா?

அமீரே அஹ்லே சுன்னத்தின் துஆ

யா அல்லாஹ்! எவரொருவர் உண்மையான உள்ளத்தோடு நல்அமல்கள்படி செயல்படுகிறாரோ, தினசரி சுயபரிசோதனை செய்து பதிவேட்டை நிரப்புகிறாரோ மற்றும் ஒவ்வொரு மாதத்தின் முதல் தேதியன்று தனது பொறுப்பாளரிடம் ஒப்படைத்து விடுகிறாரோ, அவர் கலிமாவை மொழியும்வரை மரணத்தைக் கொடுக்காதிருப்பாயாக.

اٰمِيْن بِجَاهِ النَّبِيِّ الْاَمِيْن صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

صَلُّوْا عَلَى الْحَبِيْب! صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّد